Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 06

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01 | பிரமோதூத ஹூ வைகாசி மீ 21 ஆம் உ | திங்கட்கிழமை | (04 - 06 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹஜ் 10 | ஓசை 106

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஸ்ரீலங்கா விமானி

(கொழும்பு)

இத்தாலியில் விமானம் ஓட்டியாக வேலை செய்யும் ஸ்ரீலங்காப் பிரஜை ஒருவர் இத்தாலியில் தொழில் வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக்கூறி ரூபா 6, 00, 000 மோசடி செய்துள்ளதாக நேற்றுமுன்தினம் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாலி உள்ளூர் விமானச்சேவையில் ஓட்டியாக வேலை செய்யும் இந்த நபர் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி ஐந்து பேரை அழைத்துச் சென்றுள்ளார். போலியான விசாக்கள் இவர்கள் கடவுச்சீட்டுகளில் குத்தப்பட்டிருந்ததால் இத்தாலியில் வைத்து இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த ஐந்து இளைஞர்களையும் பம்பாய் வழியாக அழைத்துச் செல்ல முயன்றபோது இத்தாலியில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைபிரச்சினையைதீர்க்க ஏழு சிரேஷ்ட அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

மாகாணசபை, சபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காண்பதற்கும் அதன் நடவடிக்கைகளுக்கு உதவவும் ஏழு சிரேஷ்ட அதிகாரிகளைப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல் மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா நியமித்துள்ளார்.

இந்த அதிகாரிகள் மாகாண சபைகள் சம்பந்தப்பட்ட இணைப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு திரு. எம். ஸ்ரீசண்முகராஜா சிரேஷ்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளுக்கு உடனடியாக விஜயம் செய்து, அங்குள்ள பிரச்சினைகள் குறித்து அடுத்த புதன்கிழமைக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

இதேவேளை மாகாணசபைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு இரண்டு வார காலத்தினுள் நிர்வாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட அமைச்சுநடவடிக்கை எடுத்துள்ளது

### வடக்கு கிழக்கிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 2032 இலட்ச ரூபா உதவி

வடக்கு-கிழக்கு பகுதிகளின் கடற்றொழில் அபிவிருத்திக்கென இரண்டாயிரத்து முப்பத்திரண்டு லட்சம் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது.

இதன் மூலம் இப்பகுதிகளிலுள்ள சுமார் முப்பதாயிரம் கடற்றொழிலாளருக்கு கடன் வசதிகளும் வழங்கப்படும்.

படகு, யந்திரம் என்பனவற்றை ஐந்துபேர் கொண்ட குழுக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மன்னார் பகுதியில் அறுபது படகுகளும் யாழ்ப்பாணப் பகுதியில் பதினாறு படகுகளும், கிளிநொச்சிப் பகுதிக்கு எட்டுப் படகுகளும், திருக்கோணமலை பகுதிக்கு முப்பத்தாறு படகுகளும் வழங்கப்பட்டுள்ளன அத்துடன் வெளியிணைப்பு யந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன



கடந்த வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருக்குமிடையில் நடந்த சந்திப்பில் எடுத்த படம். தலைவர் கோ. மகேந்திரராசா தலைமையில் திரு. யோகரத்தினம் யோகி, திரு. சுரேஷ், செல்வி ஜெயா, திருமதி பாலசிங்கம், திரு. அன்ரன் பாலசிங்கம், நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

### விரிவுரையாளர் பற்றாக்குறை நீக்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விபுலானந்த இசைநடன கல்லூரியில் தற்போதுநிலவும் விரிவுரையாளர் பற்றாக்குறை விரைவில் நிவர்த்திசெய்யப்படும்.

இத் தகவலை இந்து விவகார இராஜாங்க அமைச்சு செயலாளர் திரு. கே ஸி. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் நிரந்தர பகுதிநேர விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளார்கள்.

இராமநாதன் இசைக் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் விபுலானந்த இசை நடனக் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும்

### இராணுவத்தினர் கைது!

(கொழும்பு)

பனாகொட இராணுவ முகாம் கோப்ரல் ஒருவரும், இராணுவத்தை விட்டுச் சென்ற ஒருவரும் கொள்ளைகள் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரும் இரு கடைகளில் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாகவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஆறாவது திருத்தம் நீக்கம் அரசே கொண்டு வரும்!

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும் பிரேரணையை அரசாங்கமே கொண்டுவருவதற்கு இப்போது அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத்

எனக் கருதப்படுகிறது.

இந்த அடிப்படையில் அரசாங்கமே ஆறாவது திருத்

### போராளிகளின் நினைவு தினம்

(அச்சுவேலி)

புத்தூர் தாமு (இரத்தினம்) நினைவு நாளும் அச்சுவேலி பிரதேச போராளிகள் நினைவு தினமும் இம்மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சுவேலியில் கொண்டாடப்படுகின்றது.

# விரிவுரையாளர் பற்றாக்குறை நீக்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விபுலானந்த இசைநடன கல்லூரியில் தற்போதுநிலவும் விரிவுரையாளர் பற்றாக்குறை விரைவில் நிவர்த்திசெய்யப்படும்.

இத் தகவலை இந்து விவகார இராஜாங்க அமைச்சு செயலாளர் திரு. கே ஸி. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் நிரந்தர பகுதிநேர விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளார்கள்.

இராமநாதன் இசைக் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் விபுலானந்த இசை நடனக் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் இடையில் பரஸ்பர இணைப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (37)

## இராணுவத்தினர் கைது!

(கொழும்பு)

பனாகொட இராணுவ முகாம் கோப்ரல் ஒருவரும், இராணுவத்தை விட்டுச் சென்ற ஒருவரும் கொள்ளைகள் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரும் இரு கடைகளில் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாகவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஒரு துப்பாக்கி, கிறிஸ்கத்தி, வாகனம் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# ஆறாவது திருத்தம் நீக்கம் அரசே கொண்டு வரும்!

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும் பிரேரணையை அரசாங்கமே கொண்டுவருவதற்கு இப்போது அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. நீதி அமைச்சரும் வடக்கு-கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் நேற்று ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரைச் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்க்கட்சிகள் பலவற்றின் தலைவர்களைச் சந்தித்து ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு திரு. பாலகுமாரன் ஆதரவு திரட்டி வந்தார். சில எதிர்க்கட்சித் தலைவர்கள் திரு. பாலகுமாரனைச் சந்திப்பதற்குத்தட்டிக்கழித்து வந்ததாகத் தெரிகிறது.

இந்நிலையில் ஈழவர் ஜனநாயக முன்னணி ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்குக் கொண்டுவர உத்தேசித்த தனிநபர் பிரேரணை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தினால் மீண்டும் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது சாத்தியப்படாமல் போகலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த அடிப்படையில் அரசாங்கமே ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான பிரேரணையைக் கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்காவிட்டால் அடுத்து எந்தப் பிரச்சினை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் நினைவு தினம்

(அச்சுவேலி)

புத்தூர் தாமு (இரத்தினம்) நினைவு நாளும் அச்சுவேலி பிரதேச போராளிகள் நினைவு தினமும் இம்மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சுவேலியில் கொண்டாடப்படுகின்றது.

போராளிகள் நினைவாக அச்சுவேலி பஸ்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ''தமிழீழ பிரதேச பின்னணியில் எரியும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளையில் ஒருவர் பலி!

(பதுளை)

கல்முனையிலிருந்து பதுளைக்குச் சென்றுகொண்டிருந்த லொறியொன்றை ஆயுதந்தாங்கிய கோஷ்டியொன்று வழிமறித்து ஆயிரத்து நூற்றி ஐம்பது ரூபாவைக் கொள்ளையடித்தது. இச்சமயம் அங்கு வந்த அதிரடிப் படையினருக்கும் கொள்ளையருக்குமிடையே நடந்த துப்பாக்கி சூட்டில் ஒருவர் மரணமானார்.

## ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து முதல் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருகால்களை இழந்த யாழ். சந்தைப்படுத்தும் திணைக்கள ஊழியரான எஸ். மரியநாயகத்துக்கு ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து முதன் முதலாக விபத்துக்காப்புறுதி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் வைத்து இவருக்கு முப்பத்துமூவாயிரத்து அறுநூறு ரூபா காசோலையை தொழில் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா வழங்கினார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தஇவர் 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பருத்தித்துறையில் வைத்து இந்தியப்படையினரால் சுடப்பட்டதால் இரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புக்கு இன்று புலிகளுடன் ஹமீத் பயணம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியும் சமாதானமும் தொடர்ந்து நிலவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அடுத்த நடவடிக்கைகள் பற்றி நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கவும் நீதி அமைச்சர் ஜனாப் ஏ, ஸி எஸ். ஹமீத் இன்று திங்கட்கிழமை காலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் மட்டக்களப்புக்குச் செல்கின்றார் அங்கு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் தளபதி கருணாவையும், இலங்கை இராணுவ உயர் அதிகாரிகளையும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மது போதையில் மாணவர் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தபாலக ஊழியர்கள் மது போதையில் மாணவர்கள் மீது கூரிய ஆயுதங்களினால் தாக்கியதனால் இரண்டு மாணவர்கள் படுகாயத்திற்குள்ளாகினர்,

நெடுந்தீவு பகுதியில் மாணவர்கள் இருவர் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த வேளையில் நெடுந்தீவு தபாலக ஊழியர்கள் சிலர் வீதியில் மது போதையில் தம்மை வழிமறித்துத் தாக்கியதாகவும் இதனால் காயமடைந்த தாம் வைத்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிறப்பு சான்றிதழ் மோசடி கொழும்பில் ஐவர் கைது!

(கொழும்பு)

அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட போலி பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும் மோசடி குழுவொன்றை பொலிஸார் கைது செய்தனர்.

புறக்கோட்டை கதிரேசன் கோயில் வீதியில் உள்ள ஒருவரிடம் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட பிறப்புச்சான்றிதழ் புத்தகம் ஒன்று கைப்பற்றப் பட்டதையடுத்தே இந்தக்குழு பிடிபட்டது.

மாளிகாவத்தை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வேலை நிறுத்தம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவர் இந்தப் புத்தகத்தை நாலாயிரம் ரூபாவுக்கு விற்றதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியவெளியுறவு அமைச்சரின் இலங்கை விஜயம்

(புதுடில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் அடுத்த மாதத்தின் பிற்பகுதியில் இலங்கை வரவிருக்கின்றார். இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாக டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய - இலங்கைப் பொருளாதாரக் கூட்டுக் கமிட்டிகளின் கூட்டத்திற்குத்தலைமை

(6ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுனர் ஆசிரியர்களுக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை

### முறைகேட்டை நீக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிலுனர் ஆசிரியர் தெரிவில் ஏற்பட்ட முறைகேடுகளை நீக்கும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளரால் தனித்தனி நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

முறைகேடுகள் கண்டுபிடிக்கப்படுமிடத்து, தேவையேற்படின் தகுதியீனங் காரணமாக தரமற்றவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர். அவ்வாசிரியர்களின் பிரதானபாடமாக அமையும் பாடங்களில் திருப்தியில்லாவிடின் உடனடியாக வேறு பாடங்களுக்கு மாற்றப்படுவர்.

குறித்த விசேட பாடங்களில் அடிப்படை அறிவில்லாதவர்களும் அப்பாடங்களைக் கற்பிப்பதால் [illegible]எதிர்கால மாணவசமுதாயம் கல்வியில் பின்தங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை – என யாழ் கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

### குடும்பத்தவருக்கு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

இந்தியப்படையுடன் தப்பியோடிச் சென்ற இயக்கத்தினரால் வலிகாமம் பகுதியில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள், உறவினர்கள் சத்தியக் கடதாசி இருந்தால் அவற்றையும் கொண்டு இன்று கோண்டாவிலிலுள்ளவிடுதலைப் புலிகள் அலுவலகத்துக்கு வருமாறு கோரப்படுகின்றனர். இத்தகவலை கோண்டாவில் அலுவலகம் நேற்று அறிவித்தது.

## சமகால நிகழ்வுகளை எழுத்தில் வடிப்பவர்களே எமக்கு அவசியம்

\- டொமினிக்

(யாழ்ப்பாணம்)

சமகால நிகழ்வுகளை போராட்ட உணர்வுகளைத் தமது எழுத்தில் வடிக்கும் எழுத்தாளர்களே இன்று தமிழீழத்திற்கு அவசியமானவர்கள் எமது சமுதாயத்தில் 1500க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 15க்குட்பட்டவர்களே தமது எழுத்தில் போராட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றார்கள். இந்நிலை மாற வேண்டும்—என்றார் டொமினிக்.

நேற்[illegible]று நல்லூர் நாவலர் மண்ட[illegible]த்தில் யுனிவேர்சல் கல்வி[illegible] தேனீக்கள் அமை[illegible] நடாத்திய சித்திராநாகநாதனின் ''கிராமத்து மண்கள் சிவக்கின்றன'' என்ற சிறுகதைத் தொகுதியின் அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தூதுவர்கள் அதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து ஸ்தானிகர் நேற்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகியையும் அரசியல் ஆலோசகர் திரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வட்டக்கச்சி வைத்தியசாலையில் நோயாளர் நலன் புரிச்சங்கம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பொறுப்பாளர் திரு. எஸ். விஜயராசா தலைமையில் இந்த அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

திரு. விஜயராசா அங்கு பேசுகையில் கூறியதாவது:-

இம்மாவட்டத்தில் கூடுதலாக வறியமக்களும், கல்வி அறிவற்ற மக்களுமே வாழுகிறார்கள் இவர்களுக்கு போதிய சுகாதார அறிவும் வசதிகளும்இல்லாததாலேயே இவர்களுக்கு கூடுதலாக நோய்கள் ஏற்படுகிறது.

நோய்கள் ஏற்படாது தடுக்கும் வழிமுறைகளை நாங்கள் மக்களுக்குப் போதிக்க வேண்டும். நோய்வந்ததற்குப்பின் நோயைக் குணப்படுத்துவதிலும் பார்க்க நோயை வர விடாது பார்த்துக் கொள்வதே மேல்.

சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமும், சுகாதார அறிவைப் புகட்டுவதன் மூலமும் நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

சிறந்த தொண்டர்களைத் தெரிந்து அவர்களுக்குபோதிய பயிற்சி அளித்து, அவர்கள் மூலம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு நல்ல வைத்திய சேவை கிடைக்கச் செய்தல் வேண்டும். (49)

சுன்னாகம்ப.நோ.கூ. சங்கம்(வரைவுள்ளது) சுன்னாகம்

## பதவி வெற்றிடங்கள் (தற்காலிகம்)

கீழ்க் குறிப்பிடப்படும் தற்காலிகப் பதவிகளுக்கு தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. லொறிச்சாரதிகள்

சம்பளம்:- ரூ 805/- உடன், சங்கத்தால் வழங்கப்படும் அலவன்சுகள்.

தகைமை:- 5 ஆம் வகுப்புச் சித்தியுடன் பஸ், லொறி ஆகியன ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரமும், 04 வருட அனுபவமும்.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 20 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

2. லொறிக் கிளீனர்கள்

சம்பளம்:- ரூ700/- உடன், சங்கத்தால் வழங்கப்படும் அலவன்சுகள்.

தகைமை:- 5 ஆம் வகுப்புச் சித்தியுடன் நல்ல தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 15 - 06 - 1990.

விண்ணப்பப் படிவங்களையும், இப்பதவிகள் சம்பந்தமான நிபந்தனைகள், பிணைகள் மற்றும் தகவல்களையும் ரூ 5/- செலுத்திச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், பொதுமுகாமையாளர்.
சுன்னாகம்,
31 - 05 - 90. (B/ 1077)

## விளையாட்டு போட்டி

பளை மகாவித்தியாலயத்தில் இல்லங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி வியாழன் நடைபெற்றது.

பளை கொத்தணி அதிபர் திரு. அ பொ. செல்லையா தலைமையில் இது நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக திரு. தர்மரத்தினம், பளை உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ். கந்தசாமி ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

முதலாவது இடத்தை இளங்கோ இல்லமும், இரண்டாவது இடத்தை வள்ளுவர் இல்லமும், மூன்றாவது இடத்தை கம்பர் இல்லமும் பெற்றுக்கொண்டன. முதலாவது இடத்தைப்பெற்ற இளங்கோ இல்லத்திற்கு பளைப்பகுதியில் இருந்துஇறந்த போராளிகளின் நினைவாக பரிசு வழங்கப்பட்டது.

# கிரிக்கெட் உபகரணங்கள்

## பிரிட்டிஷ் தூதரகம் அன்பளிப்பு


கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதுவராலயம் அண்மையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் கோஷ்டிக்குகிரிக்கெட்உபகரணங்கள் வழங்கியது.

இவற்றின் பெறுமதிபதினையாயிரத்திற்கு மேலாகும். இதனைத் தொடர்ந்து பல்வேறு விளையாட்டுத்துறைகளுக்கும் உபகரணங்கள் கோரப்பட்டு தற்சமயம் கரம், சதுரங்கம், டிரால்ட்ஸ், சடதாசிக் கூட்டம், பாம்பும் ஏணியும், லூடோ போன்ற விளையாட்டுகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்விளையாட்டுகள்மல்லாகம்கிராம அபிவிருத்திச் சங்க வளவில்எதிர்வரும் 9 ஆம்திகதி சனிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் சங்க உபதலைவர் திரு.ச. கார்த்திகேசுவால் ஆரம்பித்து வைக்கப்படும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 03 1989



உதிர்வு: 14 06 1989

திதி: வைகாசி சுக்கில பக்ஷ ஏகாதசி 04.06.1990

அமரர்
சே. கந்தசாமி (இராசு)

ஆண்டொன்று போனாலும் உன்
நினைவலைகள் அழியவில்லை
வாவென்று கேட்காமல் - வந்மெக்கு உதவிடும்
உத்தமனாய் நீ வாழ்ந்தாய்
சாவொன்று வந்ததினால் நீ
எமை விட்டுப் பிரிந்தாலும்
உன்னுடைய பிரிவினால் நாங்கள்
வாடுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்
(குரு) திர்ஷிகா கலைக்கூடம்
நாவலடி லேன் - திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்,
R 331

வின்ஸர்-யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.15, 6.15
8.00 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
8-00 9-30
Sungpa & Alanyen Naiyenna. Yuchein
in
THE KILLER ELEPHANTS
(Cinemascope Colour)

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-30, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30,9-3
(Fantastic Film, Suitable for Childrens)
CRAZY JUNGL E ADVENTURES
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்)
4-00 7-00 9-30
A NIGHT ON THE TOWN
8ஆம் திகதி முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
சம்சாரம் அது மின்சாரம
(கலர்)

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த
ராஜா சின்ன ரோஜா
சவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது

ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 7.00, 9.30
சனி, ஞாயிறு நாட்களி
10 30, 2 30, 630, 9 3 0
விஜயகாந், ரேகா, செந்தில்
நடித்த
சொல்வதெல்லாம் உண்மை
B 8780

ராஜா (யாழ்)
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக்
நடித்த
மௌனராகம்

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி!

பிணைகள் மற்றும் தகவல்களையும் ரூ 5/- செலுத்திச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், பொதுமுகாமையாளர்.
சுன்னாகம்,
31 - 05 - 90.

(B/ 1077)

டாவது இடத்தை வள்ளுவர் இல்லமும், மூன்றாவது இடத்தை கம்பர் இல்லமும் பெற்றுக்கொண்டன. முதலாவது இடத்தைப்பெற்ற இளங்கோ இல்லத்திற்கு பளைப்பகுதியில் இருந்துஇறந்த போராளிகளின் நினைவாக பரிசு வழங்கப்பட்டது.

உன்னுடைய பிரிவினால் நாங்கள் வாடுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்
(குரு) திர்ஷிகா கலைக்கூடம்
நாவலடி லேன் - திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்,

R 331

TOWN
8ஆம் திகதி முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
சம்சாரம் அது மின்சாரம்
(கலர்)

சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக் நடித்த
மௌனராகம்

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி!



தோற்றம்
26. 9. 1912
மறைவு
15. 5. 1989

திதி 4. 6. 1990

தோற்றம்
28. 9. 1927
மறைவு
27. 7. 1988



R. C. மன்மதராயன் (J.P)

திருமதி ம. உருத்திராதேவி

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

241, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்.

(R.324)

## நிவாரணம் வழங்கவில்லை என மக்கள் ஆர்ப்பாட்டம்

(தீவுப்பகுதி)

அரசால் தொழில்பாதிக்கப் பட்டோருக்கு வழங்கி வரும் தொழில் இழப்பு நன்கொடைப்பணம் நாலாயிரம் ரூபா தமக்கு வழங்கப்படவில்லை எனக்கோரி புங்குடுதீவு நான்காம் வட்டார மக்கள் ஆண்களும், பெண்களுமாக நூற்றுக்கணக்கானோர் ஒன்று சேர்ந்து வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பும், வேலணையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக் காரியாலயம் முன்பும் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்கள் தமது கோரிக்கையை மக்கள் முன்னணியின் தீவக முக்கியஸ்தர் திரு. நரேஸ் அவர்களிடம் கையளித்தனர். (15)

## பன்றி இறைச்சி விற்பதற்கு சின்னக்கடையில் தடை

(விசேட நிருபர்)

சின்னக்கடைச் சந்தையில் பழுதடைந்த பன்றி இறைச்சி விற்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பிரிவு தடை செய்தது.

இரு தினங்களுக்கு முன்னதாக வெட்டப்பட்டு குளிரூட்டப்பட்ட இறைச்சியை பரிசோதனையின் பின் கண்டறிந்த சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றிப் புதைத்தனர்.

மூளைக் காய்ச்சல் நோயைப் பரப்பும் தன்மையைக் கொண்ட பன்றி இறைச்சியைப் பழுதடைந்த நிலையில் உட்கொள்வதால் நோய் தீவிரமாகப் பரவும் அபாயமுடையதென பொதுமக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பிரிவு பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

விற்பனை செய்தவர் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டார். (21)

## பொது மக்கள் நலன் கருதி ப. நோ. கூ. ச. நடவடிக்கை

(சுதுமலை)

நல்லூர் பகுதி பொதுமக்களின் நலன்கருதி நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய போட்டஸ்ரற் பிரதி எடுக்கும் யந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

இதுவரை இப்பகுதி மக்கள் போட்டஸ்ரற் பிரதி எடுப்பதற்கு யாழ்ப்பாண நகருக்கு அலைந்து திரிந்த குறைபாடு இதனால் நீங்குகிறது.

அத்துடன் ஏனைய இடங்களைவிட இங்கே போட்டஸ்ரற் பிரதி எடுப்பதற்கு ஐம்பது சதம் குறைத்து அறவிடப்படுகிறது. இச்சேவையை நல்லூர்பகுதி மக்கள் பாராட்டியுள்ளனர்.

## மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளருக்குப் பால் நிறுத்தம்

(வடமராட்சி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நோயாளருக்கு வழங்கப்பட்டு வந்தபால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்தகால இராணுவ அட்டூழியங்களின் போதும் இரண்டு வருடங்களாக வைத்தியசாலையில் மேற்படி பால் விநியோகம் இடைநிறுத்தம் செய்யப்பட்டு இவ்வருடம் ஜனவரி முதல் மீண்டும் விநியோகம் செய்யப்பட்டுவந்தது.

தற்போது கடந்த இரு மாதங்களாக மீண்டும் இது நிறுத்தப்பட்டுள்ளது,

மேற்படி பால் நிறுத்தத்தினால் நோயாளர் பாதிப்படைந்துள்ளதோடு குறிப்பாக சிறுவர்களே பெரும் பாதிப்பு அடைந்துள்ளார்கள் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (68)

## மாகாணசபை ஊழியருக்கு தனியான வங்கிக் கணக்கு

(மட்டக்களப்பு)

மாகாணசபைகளின் உத்தியோகத்தர்களுக்கு சம்ளமுற்பணம், கடன்வழங்குதல் ஆகியவற்றிற்கு தனியான கணக்கு ஆரம்பிக்கல் வேண்டுமென ... கையில் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் தேவையான நிதி பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை மாகாணசபைகளே தயார்செய்து கொள்ள வேண்டுமென ...

## ஐ. நா. பொதுச்செயலர் ஈரானுக்கு விரைவில் விஜயம்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் திரு. பெரஸ் டிக்செய்யார் விரைவில் ஈரானுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஈரானிய ஜனாதிபதி அலி அக்பர் ரவ்ஸன் யானியின் அழைப்பை ஏற்று அவர் இங்கு வருகிறார்.

ஈரான், ஈராக் யுத்தம் முடிவடைந்த பின்னர் இங்கு இவர் விஜயம் செய்வது இதுவே முதல்தடவை.

இதேபோல தாம் ஈராக்கிற்கும் விஜயம் செய்யவிருப்பதாகவும் திரு. பெரஸ் டிக்கெய்யார் தெரிவித்தார்.

ஈரான் - ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முக்கிய காரணி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பி. பி. ஸி. ராய்ட்டர் நிருபர் ஜமீல் காஷ்மீரில் காணாமல் போனார்

### இந்திய இராணுவம் அழைத்துச் சென்றதாக சாட்சிகள்

பி. பி. ஸிக்கும், ராய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கும் செய்திகள் அனுப்பிய காஷ்மீர் பத்திரிகையாளர் யூசுப் ஜமீல் என்பவர் ஸ்ரீ நகரில் நேற்று முன்தினம் முதல் காணாமல் போய்விட்டார்.

அதிகாலை இங்குள்ள இராணுவத்தினரே இவரை அழைத்துச்சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்ட போது எதுவும் தெரியாது எனக் கூறியுள்ளனர்.

காஷ்மீர் தீவிரவாதிகள் இராணுவ சீருடையில் வந்து இந்த பத்திரிகையாளரை அழைத்துச் சென்றிருக்கலாம் என இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகையாளரின் அறையில் தங்கியிருந்த இரு புகைப்படப் பிடிப்பாளர்கள் தெரிவித்த தகவலின்படி இந்திய இராணுவத்தின் சீருடை அணிந்த வீரர்கள் நேற்று முன்தினம் அதிகாலை அவரைக் கூட்டிச் சென்றதாக தெரிவித்தனர்.

இவரது வீட்டுக்கு வெளியே காவலில் நின்ற பொலிஸ்காரரும் நேரில் கண்டவர்களும் தகவல் தருகையில் வந்தவர்கள் இராணுவத்தினரே என உறுதிப்படுத்தியுள்ளனர்.

வந்த இந்திய இராணுவத்தினர் குர்காஸ் இனத்தவர் என்றும் இந்திய இராணுவத்தின் வழக்கமான ஆயுதங்கள் இவர்களிடம் இருந்ததாகவும் ஒரு லொறி ஒரு ஜீப்பில் வந்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனா.

இச்சம்பவத்தின் மூலம் இந்தியாவுக்கு வெளியுலகில் அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கமாக காஷ்மீர் தீவிரவாதிகள் செயற்பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மார்க்கோஸின் மனைவி நீதிமன்றத்தில் இரத்தவாந்தி

(நியூயோர்க்)

பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸின் மனைவி இமல்டா மார்க்கோஸ் இரத்த வாந்தி எடுத்து நீதிமன்றத்தில் மயங்கி விழுந்தார்.

இங்குள்ள நீதிமன்றம் ஒன்றில் இவர் மீதான விசாரணை நடைபெற்றபோது அவர் மயங்கி விழுந்து இருமிக்கொண்டு இரத்த வாந்தி எடுத்தார்.

உடனடியாகஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதற்கு முன்னரும் இவர் இரு தடவைகள் நீதிமன்றத்தில் நோய்வாய்ப்பட்டு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

## இராணுவத்துக்கு எயிட்ஸ் நோய்

தாய்லாந்து இராணுவத்தினரில் ஐநூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆட்கொல்லி நோயான 'எயிட்ஸ்' பீடித்துள்ளதாக இராணுவ வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## காஷ்மீரின் சீர்குலைவிற்கு பாகிஸ்தானே காரணம்

### பாகிஸ்தான் ஒப்புக் கொண்டதாக தகவல்

காஷ்மீரில் பிரச்சினை எழுந்து அங்கு நிலைமை சீர்குலைய பாகிஸ்தானே காரணம் என்பதை பாகிஸ்தான் ஒப்புக்கொண்டிருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜரால் மலேஷியாவில் உள்ள செய்தி ஏஜன்ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்தார்.

இதனை பாகிஸ்தான் சர்வதேச அதிகாரியும் ஒப்புக்கொண்டதுடன் இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்படும் எனவும் அவர்களிடம் தெரிவித்துள்ளதாகவும் திரு. குஜரால் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்படி பாகிஸ்தான் நடந்து கொண்டால் பாகிஸ்தான் இந்திய உறவுகள் புதிய அத்தியாயத்திற்கு வழிவகுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காஷ்மீர் விடயம் தொடர்பாக இந்தியா ஒருபோதும் யுத்தம் செய்யமாட்டாது; ஆனால் பஞ்சாப்பிற்குள்ளும், காஷ்மீருக்குள்ளும் ஆயுதங்கள், போதைவஸ்து, தீவிரவாதிகள் வருவதை பாரதம் புறக்கணிக்கமுடியாது.

எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் படைகளைக் குவித்து வருகிறது. ஆனால் இந்தியா நிதானமாக நடந்துவருகிறது; இவ்வாறு அவர் அப்பேட்டியில் கூறினார்.

இதேவேளை பாரதம் எல்லையில் படைகளைக் குறைத்ததையடுத்து பாகிஸ்தானும் தனது கவசவாகனப் படைப் பிரிவை குறைக்க நடவடிக்கை எடுக்கும் என பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ஜாமீல் அகமத்கான் தெரிவித்துள்ளார்.

## யாழ். பாடசாலைகளில் "இனாம்" இன்றி அனுமதியில்லை

கல்விக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே உள்ள தொடர்பு நெடுநாளாகவே பேசப்பட்டு வரும் விடயமாகும். பொருளியல் வல்லுனர்களான அடம்ஸ்மித் முதல் மார்ஷல் வரை இத்தொடர்பு வலியுறுத்தப்படுகிறது.

ஒரு நாடு பொருளாதார முன்னேற்றம் அடைவதற்குக் கல்வி இன்றியமையாததோடு, நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கும், முழுமையான ஆளுமையை விருத்தி செய்வதற்கும் கல்வி அத்தியாவசியமாகின்றது. ஆனால் இத்தகைய கல்விக்கான வாய்ப் ...

அவர்களின் ஊதியம் தாழ்வாய் இருப்பதையும் கவனத்திற்கொள்வது எல்லோரையும் 'இனாம்' வாங்கும்படி அதிபர்கள் வற்புறுத்துவது ஒட்டுமொத்தமாக எதிர்காலத் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

### இனாம் கொடுப்பதில் பலவகை

யாழ்ப்பாணத்தின் மத்தியில் ஒரு பள்ளிக்கூடம், அக்கல்லூரியின் கட்டிடங்கள் பல மாரிகளையும் கோடைகளையும் தாங்கித் தலை நிமிர்ந்து நிற்கின்றன. அப் ...

... களுக்கு இங்கு பணம் வாங்கிக் கொண்டு அனுமதி தரப்படுகிறது. புத்திஜீவிகள் என்று அழைக்கப்படுபவர்கள் அவர்கள் திருநெல்வேலியில் இருந்தால் என்ன? கொக்குவிலில் இருந்தால் என்ன? அவர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்படும். அவ்வளவுதான் ஆனால் அயலில் உள்ள பிள்ளைகளுக்கு அவர்கள் ஏழைகளாக, சமூக அந்தஸ்தில் குறைவானவர்களாக இருந்தால் அனுமதியில்லை, கல்வியைப் பற்றி மேடைகளில் பேசித்திரியும் அதிகாரிகளும் இது பற்றியறியாததுபோல் ஏனோ தானோ என்று இருந்துவிடுகிறார்கள், இந்தப் பள்ளிக்கூடம் கல்வி இலாகாவுக்குள் ஒரு கல்வி இலாகா இவர்கள் சொன்னாலும் செய்யமாட் ...

பிள்ளைகள் தான் படிக்கிறார்களாம் அங்கும் 'இனாம்' வியாதி பரவியுள்ளதாகப் பெற்றோர் அங்கலாய்க்கிறார்கள்.

### சமயத்தின் பெயரால் பாடசாலை நன்கொடை

யாழ்ப்பாணத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்த்த பாடசாலை ஒன்று உண்டு. இங்கு போட்டிப் பரீட்சையில் அனுமதி பெறும் மாணவர்களின பெற்றோர்/பாதுகாவலர் அழைக்கப்பட்டு, கோயிலின் பெயரால் நன்கொடை பெறப்படுகிறது. நன்கொடை பல ஆயிரங்களுக்குப் போகுமாம். ஆனால் ஒழுங்காகப் பதியப்பட்டு உரிய தேவைக்கு பணம் நல்ல முறையில் செலவு செய்யப்படுகிறதாம். பணமில் ...

... றால், ஒரு கல்லூரியின் ஆசியர் ஒருவர் பள்ளிக் கூடத்தின் பெயரை விற்று ஒரு அனுமதிக்கு ரூபா 25,000 வரை ஒருவரிடமிருந்துபெற்றுள்ளாராம் இம்மாணவனின் தாயார் கச்சேரியில் ஒரு இலிகிதர். தகப்பனார் வெளிநாட்டிலாம்.

இப்போது கல்வி கட்டாயம் என்பதுபோல் கல்விஅமைச்சர் அத்துலத்முதலி பேசிவருகிறார். இந்திய அரசியல் சட்டத்தில் 6 முதல் 14 வரையுள்ள வயதினருக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலும் இதே வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எது எப்படியிருந்தாலும் ஏழை என்ற காரணத்தால் ஒரு குழந்தைக்குக் கல்வியில் சமசந்தர்ப்பம் மறுக்கப்பட்டு ...

இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்தகால இராணுவ அட்டூழியங்களின் போதும் இரண்டு வருடங்களாக வைத்தியசாலையில் மேற்படி பால் விநியோகம் இடைநிறுத்தம் செய்யப்பட்டு இவ்வருடம் மாதங்களாக மீண்டும் இது நிறுத்தப்பட்டுள்ளது,

மேற்படி பால் நிறுத்தத்தினால் நோயாளர் பாதிப்படைந்துள்ளதோடு குறிப்பாக சிறுவர்களே பெரும் பாதிப்பு அடைந்துள்ளார்கள் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (68)

# மாகாணசபை ஊழியருக்கு தனியான வங்கிக் கணக்கு

(மட்டக்களப்பு)

மாகாணசபைகளின் உத்தியோகத்தர்களுக்கு சம்பளமுற்பணம், கடன்வழங்குதல் ஆகியவற்றிற்கு தனியான கணக்கு ஆரம்பித்தல் வேண்டுமென பொதுநிர்வாகம் மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் தேவையான நிதி பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை மாகாணசபைகளே தயார்செய்து கொள்ள வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கடன்வழங்குதல் விதிமுறை வழிமுறைகள் மாகாணசபைகள் தீர்மானித்தல் வேண்டும் என அச்சுற்றறிக்கை தெரிவித்துள்ளது. (37)

# கல்வியும் விளையாட்டும் மனிதனுக்கு இரு கண்கள்

(கிளிநொச்சி)

இன்றைய இளைஞர்கள் கல்வியில் காட்டும் ஆர்வம் விளையாட்டுக்களில் காட்டுவதில்லை. கல்வி வளர்ச்சிக்கு உடல் வளர்ச்சிதான் முக்கிய காரணம் என்பதை பலர் மறந்து விடுகிறார்கள்.

அக்கராயன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய அதிகாரி திரு. எஸ் அருள்நேசன் மேற்கண்டவாறு கூறினார்.

அக்கராயன் கொத்தணி அதிபர் திரு. க. சின்னராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியின் அக்கராயன் பொறுப்பாளர் திரு. திலீப் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குத்து விளக்கை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

வைத்திய அதிகாரி திரு, அருள்நேசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஒரு மனிதனுக்கு எவ்வாறு இரண்டு கண்களும் முக்கியமானதோ அவ்வாறே கல்வியும் விளையாட்டும் முக்கியமானதாகும் ஒரு கண் கெட்டு விட்டால் கூட ஒருவனின் வாழ்க்கை சோகமாகி விடும் அதேபோல கல்வியுடன்விளையாட்டும் சேரா விட்டால் மனிதனின் வாழ்க்கைபூரணத்துவம் அடைந்ததாக இல்லாது போய்விடும்.

இம்மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கிராம மக்களும் ஒன்று சேர்ந்து இவ்வித்தியாலயத்திற்கு புதிதாக இரண்டு ஏக்கர் காணியில் ஒரு விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தந்துள்ளனர். அதை நல்லமுறையில் பயன்படுத்தி விளையாட்டுத் துறையில் சிறந்த வீரர்களாக வந்து இம்மகா வித்தியாலயத்திற்கும், இம்மாவட்டத்திற்கும் பெருமையைத் தேடித்தர வேண்டிய பொறுப்பு இம்மகா வித்தியாலய மாணவர்களையே சார்ந்ததாகும் என்றார். (49)

# சம்பள முற்பணம் வழங்க தடைகள் எதுவுமில்லை

(மட்டக்களப்பு)

இவ்வருடம் மார்ச் மாதம் முன்பு மூன்றுமாத சம்பள முற்பணம் பெற்ற அரச ஊழியரொருவருக்கு ஆறுமாத சம்பள முற்பணம் வழங்குதலுக்கு தடைகள் இல்லை என பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

மூன்றுமாத கடன் முற்பணம் பெற்று ஆறு மாதங்கள் அறவீடு செய்த பின்புதான் வழங்கமுடியும் என அச்சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். (37)

கல்விக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே உள்ள தொடர்பு நெடுநாளாகவே பேசப்பட்டு வரும் விடயமாகும், பொருளியல் வல்லுனர்களான அடம்ஸ்மித் முதல் மார்ஷல் வரை இத்தொடர்பு வலியுறுத்தப்படுகிறது.

ஒரு நாடு பொருளாதார முன்னேற்றம் அடைவதற்குக் கல்வி இன்றியமையாததோடு, நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கும், முழுமையான ஆளுமையை விருத்தி செய்வதற்கும் கல்வி அத்தியாவசியமாகின்றது. ஆனால் இத்தகைய கல்விக்கான வாய்ப்புகள் பல சந்தர்ப்பங்களில் பிரபல்யமான யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்களில் பிரபலஸ்தர்களான பல கல்லூரி அதிபர்களினால் மறுக்கப்படுகிறது. ஊசி முனைக் காதுக்குள் ஒட்டகங்கள் சென்றாலும் செல்லலாம். ஆனால் ஏழைகளான சிறார்கள் இவர்கள் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் நுழைய முடியாது. ஏழைகளுக்கு யாழ்ப்பாணத்தில் கல்வியில் சமசந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. இதனால் பொருளாதார வகையில் குறைவான வருமானம் ஈட்டும் தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சி ஒரு தாழ்வான மட்டத்திலேயே காணப்படுகிறது.

### கல்லூரி அனுமதியில் பாரபட்சம்

யாழ். மாவட்டத்தில் குழந்தைகள் எழுத்தறிவு பெற்றவர்களாகவும்,பின்னர் கல்வி கற்ற மனிதர்களாகவும் ஆவதற்குப் பணம்தான் ஆதார சுருதி. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தில் முக்கியமான பாடசாலைகள் என்று அழைக்கப்படும் ஒருசில பாடசாலைகள் நுழைவுத் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தாலும், பள்ளிக்கூடங்களில் அனுமதி வழங்கப்படும்போது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒரு தொகைப் பணத்தை 'இனாம்' (Donation) கொடுக்க வேண்டியுள்ளது. இந்த 'இனாம்'களைச் சட்ட ரீதியாகப் பூசிமெழுகும் வகையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அதிபரின் ஊதுகுழல். அது ஒரு பற்றுச் சீட்டை வழங்கி எல்லாவற்றையும் சமாளித்துவிடும். பெற்றோர் தாம் விரும்பும் கல்வியையும், தாம் விரும்பும் மாப்பிள்ளையையும் 'இனாம்' கொடுத்து வாங்கும் காலம் இது. தமிழர் சமூகத்தில், திறம்பெறாத் தொழிலாளர்கள் பெரும்பாலராக இருப்பதையும், அவர்களின் ஊதியம் தாழ்வாய் இருப்பதையும் கவனத்திற்கொள்வது எல்லோரையும் 'இனாம்' வாங்கும்படி அதிபர்கள் வற்புறுத்துவது ஒட்டுமொத்தமாக எதிர்காலத் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

### இனாம் கொடுப்பதில் பலவகை

யாழ்ப்பாணத்தின் மத்தியில் ஒரு பள்ளிக்கூடம், அக்கல்லூரியின் கட்டிடங்கள் பல மாரிகளையும் கோடைகளையும் தாங்கித் தலை நிமிர்ந்து நிற்கின்றன. அப்பள்ளிக்கூடத்திலும் மற்றப் பெரிய பள்ளிக்கூடங்களைப் போல் மாமுல்படி நுழைவுத் தேர்வுப் பரீட்சைகள் நடைபெறும். திறமையின் அடிப்படையில் பிள்ளைகள் தெரிவு இடம்பெறும். பெற்றோர்கள் தை மாதம் தமது பிள்ளை

**பெற்றோர் தாம் விரும்பும் கல்வியையும், மாப்பிள்ளையையும் 'இனாம்' கொடுத்து வாங்கும் காலம் இது.**

களை அனுமதிக்கு அழைத்துக் கொண்டு வருவர். அச்சமயம் கல்லூரி வளாகத்தில் தச்சன் கூலி, மேசன் வெள்ளையடிப்போர் வர்ணம்பூசுவோர் போன்றதொழிலாளர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார்கள், அனுமதிக்குப் பொறுப்பாயிருக்கும் ஆசிரியர் ஓர் ஒப்பந்தக்காரராக மாறிவிடுவர். ஒரு குறிப்பிட்ட பகுதி திருத்த வேலை, வர்ணம் பூசுதல் போன்றவை பெற்றோருக்கு கொடுக்கப்படும். அவர்கள் அதைச் செய்து கொடுத்தால் தான் பிள்ளைகளுக்கு அனுமதி. பணமில்லாத பெற்றோர்களின் பிள்ளைகளின் நிலை இந்நிலையில் என்னாவது? ஆகக் குறைந்தது 10 பக்கற் சீமெந்து ஆவது கொடுத்தால்தான் அனுமதி.

### புத்திஜீவிகளின் பிள்ளைகளின் அனுமதி

யாழ்ப்பாணத்தில் ஒதுக்குப்புறத்திலும் சனநெருக்கடி இல்லாத ரம்மியமான சூழலில் புனிதர் ஒருவரின் பெயரைத் தாங்கிய ஒரு அரசாங்கப் பள்ளிக் கூடம் உள்ளது. இப்பாடசாலையை லெளகீகத்தை வெறுத்தவர்கள் நடாத்துகிறார்களாம். ஆனால், இப்பள்ளிக் கூடத்திலும் நுழைவு (அனுமதி) லெளகீகமயமாக்கப்பட்டுள்ளது. மூன்று மைல் சுற்றாடலில் உள்ளவர்களுக்கு பாடசாலை அனுமதியில் முன்னுரிமை என்ற விதி இங்கு கவனிக்கப்படுவதில்லை. விலை உயர்ந்த வாகனங்களில் போய் இறங்கும் புத்திஜீவிகளின் பிள்ளை

[…] அழைக்கப்படுபவர்கள் அவர்கள் திருநெல்வேலியில் இருந்தால் என்ன? கொக்குவிலில் இருந்தால் என்ன? அவர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்படும். அவ்வளவுதான் ஆனால் அயலில் உள்ள பிள்ளைகளுக்கு அவர்கள் ஏழைகளாக, சமூக அந்தஸ்தில் குறைவானவர்களாக இருந்தால் அனுமதியில்லை, கல்வியைப் பற்றி மேடைகளில் பேசித்திரியும் அதிகாரிகளும் இது பற்றியறியாததுபோல் ஏனோதானோ என்று இருந்துவிடுகிறார்கள், இந்தப் பள்ளிக்கூடம் கல்வி இலாகாவுக்குள் ஒரு கல்வி இலாகா இவர்கள் சொன்னாலும் செய்யமாட்டார்கள் என ஒரு வட்டாரக் கல்வி அதிகாரி முன்னொரு நாள் அங்கலாய்ப்புத்தெரிவித்தார்.

### பாடசாலை நிதியம்

யாழ்ப்பாணத்தில் ஓர் உயர்நிலை மகளிர் கல்லூரியில் முன்னாள் அதிபர் வசதிக் கட்டணம் தவிர 'இனாம்' வாங்குவதில்லை. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று இருந்தார். இப்போதைய அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாடசாலை அபிவிருத்திச் சபை பாடசாலைக்கான ஒரு நிதியத்தை ஆரம்பித்துள்ளது. பாடசாலை அபிவிருத்திக்கு, சுற்றாடலைச் சுத்தமாகவைத்திருப்பதற்கு உடைவுகளைச்சரி செய்வதற்கு, இத்தியாதி வேலைகளுக்கு நிதிகோரப்படுகிறது, மனம் விரும்பி, இயலுமான தொகையைப் பெற்றோர்தரலாம்என அறிவுறுத்தல் கூறுகின்றது. ஆனால் வகுப்பாசிரியர் சிலர் பிள்ளைகள் தலா ரூபா 250/- க்குக் குறையாமல் தரவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். முன்னாள் அதிபரின் கீழ் 'இனாம்' எதுவுமின்றி […] சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் படித்து வருகின்றனர் பணம் கொடுக்க முடியாது இருக்கும் குழந்தைகளின் மனோநிலை எப்படியிருக்கும். என்பதை கல்வி உளவியல் கற்றவர்கள் மறந்து விட்டார்கள் போலும்.

இந்த 'இனாம் வியாதி' இப்போது மற்றப்பள்ளிக் கூடங்களுக்கும் பரவுவதாகத்தெரிய வருகிறது. யாழ் தெற்குக் கொத்தணியில் தலைமைப் பள்ளிக்கூடத்தில் பொருளாதார வகையில் பின்தங்கிய […] பெற்றோர் அங்கலாய்க்கிறார்கள்.

### சமயத்தின் பெயரால் பாடசாலை நன்கொடை

யாழ்ப்பாணத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்த்த பாடசாலை ஒன்று உண்டு. இங்கு போட்டிப் பரீட்சையில் அனுமதி பெறும் மாணவர்களின பெற்றோர்/பாதுகாவலர் அழைக்கப்பட்டு, கோயிலின் பெயரால் நன்கொடை பெறப்படுகிறது. நன்கொடை பல ஆயிரங்களுக்குப் போகுமாம். ஆனால் ஒழுங்காகப் பதியப்பட்டு உரிய தேவைக்கு பணம் நல்ல முறையில் செலவு செய்யப்படுகிறதாம். பணமில்லாத பெற்றோர்கள், இப்பள்ளிக்கூடப் பக்கம் அனுமதி கோர ஏழைகள் தலை வைத்தும் படுப்பதில்லை.

இதில் விசேடமென்னவென் […] திக்கு ரூபா 25,000 வரை ஒருவரிடமிருந்துபெற்றுள்ளாராம் இம்மாணவனின் தாயார் கச்சேரியில் ஒரு இலிகிதர். தகப்பனார் வெளிநாட்டிலாம்.

இப்போது கல்வி கட்டாயம் என்பதுபோல் கல்விஅமைச்சர் அத்துலத்முதலி பேசிவருகிறார். இந்திய அரசியல் சட்டத்தில் 6 முதல் 14 வரையுள்ள வயதினருக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலும் இதே வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எது எப்படியிருந்தாலும் ஏழை என்ற காரணத்தால் ஒரு குழந்தைக்குக் கல்வியில் சமசந்தர்ப்பம் மறுக்கப்பட்டு குழந்தையை எழுத்தறிவு இன்றியே வளரவிட்டு அவன் மனிதனானவுடன் முதியோர் கல்வித்திட்டத்திற் கல்வி அளிக்க முயற்சிப்பது பயன் பொருத்தமன்று.

**நக்கீரன்**

## கிளிநொச்சியில்

# மதிய உணவுத்திட்டத்தால் 30000 மாணவர் பயன்

(கிளிநொச்சி)

மதிய உணவுத் திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் பயனடையவுள்ளனர். இம்மாணவர்களுக்கான உணவு முத்திரைகள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரை வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட வறுமை நிவாரண உதவி ஆணையாளரும் மேலதிக அரசாங்க அதிபருமான திரு. எஸ். அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:-

இம்மாவட்டத்திலுள்ள 77 பாடசாலைகளுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்கள் உணவு முத்திரையை மாணவர்களுக்கு வழங்குவதுடன் நின்றுவிடாது, மாணவர்கள் சத்து மிக்க உணவுகளைக் கொண்டு வருகிறார்களா என்பதை அவதானிக்க வேண்டும்.

மதிய உணவு முத்திரைகளை வழங்கி கூட்டுறவுக் கடைகளில் மாணவர்களுக்குத் தேவையான சத்துணவு மிக்க பொருட்களை வாங்கலாம். அரசு கொடுக்கும் உதவியுடன் தாய்மாரும் தம்மால் இயன்றளவு பிள்ளைகளின் உணவில் கூடிய கவனம் செலுத்திஅவர்களின் ஆரோக்கியத்திற்கு உதவுங்கள் என்றார். (49)

# கிராம சேவகர்களுக்கு சம்பள முரண்பாடு நீக்கம்

(மட்டக்களப்பு)

கிராமசேவை அலுவலர்களுக்கான புதிய சம்பளத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே கிராம சேவை அலுவலர்களாக பதவி […]ந்தவர்களுக்கும் விசேட […] அலுவலர்களாகவிருந்து பதவி மாற்றம் செய்யப்பட்டர்களுக்குமான சம்பள முரண்பாடு நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி பிரகாரம் கடந்த பெப்ரவரிமாதம் 1ஆம் திகதி முதல் புதிய சம்பளத்திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பழைய சம்பளத்திட்டம் ரூபா 17,280-14x800-6x600 27,600 நீக்கப்பட்டுள்ளது.

ரூ 19680-9 x 480 - 8 x 600-28,800 புதிய சம்பளத்திட்டம் ஆகும்.

இதன் கிராமசேவை அலுவலகர்கள் சேவைக்கேற்ப சம்பள அதிகரிப்பு பெறுவதாக கிழக்கிலங்கை கிராமசேவை அலுவலகர் சங்க செயலாளர் திரு இ.ஜே.மங்களராஜ் தெரிவித்தார் (37

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரியினால் கிளிநொச்சியில் ஒன்பது கிராமிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இரணைமடு, ஊற்றுப்புலம், ஸ்கந்தபுரம், ஜெயந்திநகர், வட்டக்கச்சி, அம்பாள்நகர், முறிப்பு, உதயநகர் ஆகிய பின் தங்கிய கிராமங்களிலேயே இவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

கால்நடைவளர்ப்பை ஊக்குவித்து வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவே இச்சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றன.

போதிய வாகன வசதியின்றி இருக்கும் இவ்வேளையில் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி பி. தங்கராசா கால் நடையாகவும், சைக்கிளிலும் சென்று சங்கங்களை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (49)

## தென்னை பயிர்ச்செய்கைக்கு ரூபா 25 லட்சம் மானியம்

(கிளிநொச்சி)

தென்னை அபிவிருத்திச் சபை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தென்னைப் பயிர்ச்செய்கையாளருக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாவுக்கு மேல் மானியம் வழங்கவேண்டியுள்ளது.

1986 ஆம் ஆண்டிலிருந்து ஒழுங்காக மானியம் வழங்கப்படாமையினாலேயே இவ்வளவு பணம் பாக்கியாக உள்ளதாம்.

வட பிராந்தியத் தென்னை அபிவிருத்திச் சபை உடனுக்குடன் அலுவல்களை முடித்துக் கொடுத்தபோதும் கலைமையகத்தின் அசமந்தப் போக்கினாலேயே இவ்வளவு தாமதம் ஏற்பட்டு வருகிறது.

சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்கும் உரிய அந்தஸ்து வழங்கியதாகக் கூறும் அரசாங்கம் வடபகுதியில் வாழும் தமிழ் தென்னை பயிற்சி செய்கையாளருக்கு வழங்க வேண்டிய மானியத்தை கடந்த 4 வருடங்களாக இழுத்தடித்து வருவது ஏன்? என கேட்கின்றனர்.

வடபகுதி தென்னை பயிர்ச் செய்கையாளர்கள் அப்பயிர்ச் செய்கையை கைவிடும் நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளனர். (49)

## மன்னார் மாவட்டத்திற்கு 1,5000 தென்னங் கன்றுகள்

(மன்னார்)

இவ்வாண்டில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையினால் பெரும்போகத்தின் போது பதினையாயிரம் தென்னங் கன்றுகளை, மன்னார் மாவட்டத்திற்கு விநியோகம் செய்வதற்கு, மன்னார் மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ. சத்தியேந்திரன் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

நெடிய இன, கலப்பின குறுகிய கால தென்னங்கன்றுகள் பயிரிட விரும்புவோர் மன்னார் மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளும்படி பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர். அதேவேளை கால் ஏக்கரிலிருந்து ஐம்பது ஏக்கர் வரை தென்னையைப் பயிரிடலாம். ஒரு ஏக்கருக்கு ரூபா நாலாயிரத்து நானூற்றி ஐம்பது படி புது நடுகை மானியம் வழங்கப்படும்.

மன்னார் மாவட்டத்தில் தெங்குச்செய்கையில் ஈடுபட விரும்புவோர் அனைவரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படியும் தங்கள் காணி உரிமைப்பிரதியைக் காட்டி விண்ணப்பப் படிவங்களைப்பெற்றுக்கொள்ளலாம். ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்பு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை திரு. ஜெ, சத்தியேந்திரனிடம் கையளிக்கும் படியும் பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

## பொதுமக்கள் பிரச்சினை தீர மட்டக்களப்பில் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள அரச திணைக்களங்களில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தாமதமின்றி தீர்வு காணும் பணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிராந்திய அலுவலகத்திற்கு அருகில் இதற்கான ''செயலகம்'' அமைக்கப்பட்டு உள்ளது.

இச்செயலகத்தில் தினமும் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை கச்சேரி, கல்வி, சுகாதாரம், மாநகரசபை உட்பட சம்பந்தப்பட்ட திணைக்கள ஊழியரொருவர்பணிபுரிவார்.

பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து அன்று பிற்பகல் தனது அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வருவார். (37)

## நயினாதீவில் இலங்கை வங்கி கரும பீடம்

(வேலணை)

இலங்கை வங்கியின் கரும பீடமொன்று நயினாதீவு நாகபூஷணிஅம்மன் ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் இயங்க இருக்கின்றது.

ஆலயத்திற்கு வரும் யாத்திரிகர்களினது நலன்களைக் கருதியும் நயினாதீவு மக்களையும் வங்கியின் வாடிக்கையாளராக சேர்த்துக் கொள்வதற்கான ஓர் சந்தர்ப்பத்தையும் இலங்கை வங்கி ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனேயும் தான் இலங்கை வங்கி இவ்வருடம் முதன் முதல் நயினாதீவில் ஆலய உற்சவகாலங்களில் தற்காலிகமாக கரும பீடத்தை ஆரம்பிக்க முன்வந்திருப்பதாக வங்கியின் உயர் அதிகாரிஒருவர்தெரிவித்தார்.

## புதிய விவாகப்பதிவாளர்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரிவுக்கான விவாகப்பதிவாளராக பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர்அலுவலகஉத்தியோகத்தர் திரு. க. ஞா. அல்போன்ஸ் பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு அல்போன்ஸ் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கற்கோவளம் கிராமத்தைச் சேர்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (25)

## நயினாதீவு படகுசேவைக்கு மற்றொரு படகு தயார்

நயினாதீவு மக்களின் கடற் பிரயாணக் கஷ்டத்தை ஓரளவில் நிவர்த்தி செய்யும் முகமாக வெகுவிரைவில் நயினாதீவு குறிகாட்டுவான் இறங்கு துறைகளுக்கிடையில் அரசாங்க மோட்டார் படகுச்சேவை ஒன்றுநடத்தப்படஇருக்கிறது.

ஏற்கனவே மோட்டார் படகொன்று இச்சேவைக்கென தயார் நிலையில் இருப்பதாகவும் மோட்டார் படகுக்கு பொருத்தப்படவேண்டிய சில பொருட்கள் கொழும்பில் இருந்து வந்ததும் அவைபொருத்தப்பட்டு எதிர்வரும் ஆலய உற்சவ காலத்தில் இருந்து இச்சேவை நடைபெறும்.


## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 DAY CLASSES (8-00 - 1-00)

அலகு 1 இலிருந்து ஆரம்பமாகும்.

(12-6-1990)

மு. குறிப்பு. (1) எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
(2) முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.
(3) முற்றிலும் பாடசாலை போன்றது.
(4) விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
(5) பரீட்சைகள் நடாத்தப்படும்.

(B1012)


## சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு 4ம், 5ம், குறுக்குத்தெருக்கள் துண்டி பத்து வீடுகள் குடியேற்றத்திட்டம் பிரதான வீதி உட்பட்ட ஜனசவிய பெறும் குடும்ப அங்கத்தவர்களின் சிரமதானப்பணி வேலைகள் நேற்றுக் காலை மணியம்பதி அம்மன் ஐயனார் ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு கே. சபாபதிப் பிள்ளை பிரதம விருந்தினராகப் பங்குபற்றி சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்தார். (24)


## இரண்டாவது ஆண்டு நிறைவு

எமது நிறுவனம் தனது சேவையின் இரண்டாவது ஆண்டை இன்று பூர்த்தி செய்கின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீடியோ கொப்பிகள், ரி. வி., டெக் வாடகைக்குப் பெறவும், வீடியோ ஓடியோ பதிவு செய்வதற்கும், வெளிப் படப் பிடிப்பு மற்றும் மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தும் கொடுக்கப்படும்.

யுபிற்றர் வீடியோ விஷன்

இல- 174, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.


## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



## 91 DAY CLASSES

(8-00 - 1-00)

அலகு 1 இலிருந்து ஆரம்பமாகும்.

**(12–6–1990)**

மு. குறிப்பு. (1) எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

(2) முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.

(3) முற்றிலும் பாடசாலை போன்றது.

(4) விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

(5) பரீட்சைகள் நடாத்தப்படும்.

(B1012) 0

0

யேற்றத்திட்டம் பிரதான வீதி உட்பட்ட ஜனசவிய பெறும் குடும்ப அங்கத்தவர்களின் சிரமதானப்பணி வேலைகள் நேற்றுக் காலை மணியம்பதி அம்மன் ஐயனார் ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு கே. சபாபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகப் பங்குபற்றி சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்தார். (24)

வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வீடியோ கொப்பிகள், ரி. வி., டெக் வாடகைக்குப் பெறவும், வீடியோ ஓடியோ பதிவு செய்வதற்கும், வெளிப் படப் பிடிப்பு மற்றும் மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தும் கொடுக்கப்படும்.**

## யுபிற்றர் வீடியோ விஷன்

இல- 174, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

(B 1089)

கரைச்சிப் பிரதேச சபை,

கிளிநொச்சிச் சந்தைக்கான 1990ஆம் ஆண்டின் பிற்பகுதிக்கான

# கேள்வி அறிவித்தல்

01. 07. 1990 ஆம் திகதி தொடக்கம் 31. 12 1990 ஆம்திகதி வரைக்கான காலப் பகுதிக்கு கிளிநொச்சிச் சநதைக் குத்தகை சார்பில் கேள்விகள் 18 06. 1990 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் 15. 06. 1990ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை கீழ்க் குறிப்பிடும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்

கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் ''விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல்வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| குத்தகை விபரம்: | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. கிளிநொச்சிச் சந்தை | ரூ. 1,20,000/- | 1000/- | 50/- |

சு. வேலுப்பிள்ளை
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.
1990. 05. 29.

(B/1078)

## காணவில்லை

**அம்பிகா! எங்கள் அருமை ஈஸ்வரியே!**

நீ அளவெட்டியிலிருந்து 27-5-90 சென்றஞாயிறு காலை புறப்பட்டு இந்த அறிவித்தல் உன் பெற்றோரிடமிருந்து 11520 நிமிடங்கள் கழிந்து பிரசுரமாகிறது. உனது இலட்சியத் துக்கு நீ இதுவரை எடுத்த பிரயத்தனங்களின் பெறுபேறு எதுவானாலும் அவற்றுடன் விரைந்து அதுவும் மிக மிக விரைந்து எம் முன்னிலையில் எம்கண் முன்னே வருவாய் என நம்பித்தவிக்கின்றோம். உனது வரவை வழிமேல் விழி வைத்துத்தவித்துக்கொண்டிருக்கும் பெற்றவர்கள் அறிவிக்கின்றோம். உன்வீட்டு வாசல் எந்தநேரமும் திறந்திருக்கும். கடன் எம்மிடமிருந்து பெற்றவர்கள் இனியாவது..............?

கமலாம்பிகை ஆறுமுகம்
அன்பு ஐயா, அம்மா

'கந்தன் அகம்'
29, அணைக்கட்டு வீதி,
திருநகர், கிளிநொச்சி.

R 330



முன்னைநாள் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்

## கப்டன் நகுலன்

(வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்)

| அவதாரம் | அவமரணம் |
|---|---|
| 30. 11. 1966 | 24. 5. 1988 |

-தமிழீழ மக்கள்

## கவிதா தொலைத் தொடர்பு நிலையம்

நாளை செவ்வாய்க்கிழமை ( 05 - 06 - 90 ) காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் திறந்து வைக்கப்படும்.

24 மணித்தி[illegible] சேவை வழங்கப்படும். உள் நாட்டு, வெளி நாட்டு சேவைகளும் வழங்கப்படும்.

# கவிதா தொலைத் தொடர்பு நிலையம்

826 / 7, கே. கே. எஸ். றோட் (தட்டாதெருச் சந்திக்கு அண்மையில்) யாழ்ப்பாணம்.

(B 1090)

### சிந்தனைக்கு

அறிந்துகொள்; அல்லது அறிந்தோருக்குச்
செவிசாய்த்துத் தெரிந்துகொள்

- கிரேஷியன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 04-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## யாழ். பொதுசன நூல்நிலையம்

யாழ்ப்பாணம் பொதுநூலகம் யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்லாது தென்கிழக்காசியாவிற்கே பெருமை தந்து தலைநிமிர்ந்து நின்றது.

தொண்ணூற்றேழாயிரம் அரும்பெரும் நூல்களையும் கிடைத்தற்கரிய ஏட்டுச் சுவடிகளையும் இந்நூலகம் கொண்டிருந்தது.

யாழ்நகர மண்டபத்துக்கு வலப்புறமாக சைவ வித்தியா விருத்திச் சங்க அலுவலகத்தின் அருகே பழைய கட்டிடத்தில் பலகை போட்ட பழைய மாடியில் நூல்கள் குறைவாக இருந்தாலும் நல்ல நூல்களுடன் நகரசபை நூலகம் இயங்கத் தொடங்கி வளர்ந்து வந்தது.

யாழ்ப்பாணத்தின் தேவையை இந்த நூலகம் நிறைவேற்ற முடியாது என்பதைக் கல்விமான்களும் அறிஞர்களும் உணர்ந்தனர்.

வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களும் கல்விமான்களும் யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்து நூல்களை ஆய்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்கள் எழுதிச் செல்லக்கூடியதாக சகல வசதிகளும் கொண்ட நூல்நிலையம் அமைய வேண்டுமென்ற சிந்தனை எழுந்தது.

இதற்குப் பெருந்தொகையான நிதி தேவைப்படுமே என்ற கேள்வியும் எழுந்தது.

பணம் திரட்டலாம்; நூல்கள் தேடலாம்; முதலில் நூல்நிலையத்துக்கான திட்டத்தைத் தயாரிப்போம் என்று கல்விமான்கள் தீர்மானித்தனர். இதன்படி நூல்நிலையக் குழுவொன்றைத் தெரிவு செய்வதென்று அப்போது நகர மேயராக இருந்த சாம் ஏ. சபாபதி, வண. லோங் அடிகளார் போன்றவர்கள் தீர்மானித்து நூல்நிலையக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பெற்றது.

1950 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் (இப்பொழுது யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்) சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்விழா மூன்று தினங்கள் நடைபெற்றது.

டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, டாக்டர் அ.சீனிவாசகராவ், டாக்டர் மு. வரதராசனார், கல்கி, பெரியசாமித்தூரன் போன்ற தமிழ்நாட்டு அறிஞர்களுடன் கட்டிடக்கலை நிபுணர் வி.எம் நரசிம்மனும் தென்னாபிரிக்காவிலிருந்து கண்ணபிரான் எம். பிள்ளை போன்ற வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த அறிஞர்களை நகர மேயர் சாம் சபாபதியும் மற்றும் நுல்நிலையக்குழு உறுப்பினர்களும் சந்தித்து உத்தேச புதிய நூல்நிலையம்பற்றி கலந்தாலோசனை செய்தனர்.

நூல்நிலையம் அமைவதற்கு உதவி செய்வதாக இங்கு வந்திருந்த தமிழ் அறிஞர்கள் உறுதியளித்தனர். கட்டிடக்கலைச் சிற்பி வி எம்.நரசிம்மன் புதிய நூலகத்தின்

---

'றோ' என்ற உளவுப் பிரிவு மர்மங்கள்

# ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தை ஏற்கும்படி

# பிரபாவுக்கு 50லட்சம்; இந்திய அரசு முன்வந்தது

முதலில் இரண்டாவது செய்தியின் பின்னணியைப் பார்க்கலாமா?

யார் இந்த திரேன் பகத்? எதற்காக அவரை 'றோ' உளவு அமைப்பு கொன்றிருக்கும் என்று மான் சந்தேகப்படுகிறார்?

திரேன் பகத் ஆங்கிலப் பத்திரிகைத்துறையில் ஒரு பிரகாசமான எரிநட்சத்திரம் போல் திடீரென வந்து மறைந்த இளைஞர். அஜ்மீரில் கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புப் படித்தார். 1982இல் 'சண்டே ஒப்சேவர்' இதழில் திரேன் பகத் எழுத ஆரம்பித்த போது அவருக்கு வயது இருபத்தைந்துதான்! அடுத்த ஆறு வருடங்களுக்குள் திரேன் பகத் பல மறக்க முடியாத செய்திக் கட்டுரைகளை 'வீக்லி', 'சண்டே', 'இண்டியன் போஸ்ட்', 'லண்டன் ஒப்சேவர்' முதலிய பத்திரிகைகளில் எழுதினார்.

'என். டி. ராமராவுக்கு முகஸ்துதிதான் பிடிக்கும்' என்று நிரூபிக்க விரும்பிய திரேன் பகத், 'வீக்லி' இதழுக்காக ராமராவைப் பார்க்கப் போனதும் எதிர்பாராதவிதமாக ராமராவின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தார். 'என்னை யாரும் எழுப்பிவிடுற மாதிரிக் காணோம்... பிறகு நானாக எழுந்து பார்த்தால் ராமராவ் முகமெல்லாம் புன்னகை'...!என்றார் திரேன் பகத். அடுத்த ஒரு மணிநேரப் பேட்டியில் திரேனிடம், தன்னைக் கொமேனி என்றெல்லாம் வர்ணித்துக் கொண்டுவசமாக மாட்டினார் ராமராவ்.

திரேனின் முக்கிய செய்திகளில் ஒன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இந்திய அரசு ஐம்பதுலட்சரூபாய் கொடுத்து ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்துக்குச் சம்மதிக்கச் சொன்னதாக இந்தியத் தூதர் டிக்சித் பேட்டியில் தெரிவித்ததாகும்.

இதுபோன்று திரேன் அம்

## இப்படி பல மர்மச் செய்திகளைத் தந்த பத்திரிகையாளர் விபத்தில் மர்ம மரணம்!

மூன்று மாதங்களுக்குப் பிறகு 1988 மார்ச் மாதத்தில் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாயிற்று பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய ஆலயம் ஒன்றில் மத்திய ரிசர்வ் பொலிஸ்படை முகாமிட்டிருந்தது. அந்த ஆலயத்தின் மீது ராக்கெட் ஏவுகணைகள் வீசப்பட்டன. ஆலய மதில்சுவர் நொறுங்கியது. சுவருக்கு மறுபக்கம் படுத்திருந்த பொலிஸாருக்குக் காயம் ஏதும் ஏற்படவில்லை. தொடர்ந்து பஞ்சாபில் ஆங்காங்கே ராக்கெட் ஏவுகணைகளைத் தீவிரவாதிகள் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதாகவும், சில இடங்களில் அவை சிக்கியதாகவும் செய்திகள் வந்தன.

> **வி. பி. சிங்**
>
> 'இலங்கைப் பிரச்சினையில் இதுவரை தீவிரமாகப் பங்கேற்று வந்த 'றோ' உளவு அமைப்பின் அதிகாரிகள் இனி மேற்கொள்ளப்படும் தீர்வுக்கான முயற்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது' என்று பிரதமர் வி. பி. சிங் உத்தரவிட்டிருக்கிறார்.

இந்தச் செய்திகள் வெளியான மறுநாள் பாராளுமன்றத்தில் ராஜீவ் அரசு, 59ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. இதன்படி, பஞ்சாபில் அவசர நிலை பிரகடனம் செய்யவும், பஞ்சாப் தொடர்பாக எந்தப் பகுதியிலும் அவசர நிலைக்கு உத்தரவிடவும் அடிப்படை உரிமைகளை ரத்துச் செய்யவும் வழிவகுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசிய காங்கிரஸ் எம். பி-க்கள் பலரும் பஞ்சாபில் தீவிரவாதிகள் ராக்கெட் ஏவுகணைகளைப் பயன்படுத்துவதையே சுட்டிக்

முதலிய பத்திரிகையாளர்கள் அவ்வப்போது வெளிப்படுத்திய செய்திகள்... இவை மட்டுமே இந்திய உளவுப் பிரிவுகளைப் பற்றி பகிரங்கமாக விவரித்துள்ளன

கடந்த ஐந்து வருடங்களாகப் பஞ்சாப் இலங்கைப் பிரச்சினைகளின் விளைவாக, றோ, ஐ.பி (இன்டெலிஷன்ஸ் பீரோ) போன்றவற்றின நடவடிக்கைகள் பற்றிக் கொஞ்சம் அதிகமாகச் செய்திகள வரத்தொடங்கியுள்ளன மற்றபடி உளவுப் பிரிவினர் என்ன தவறு செய்தாலும் பொது மக்களுக்குத் தெரியவோ, தட்டிக் கேட்கவோ வாய்ப்பில்லாத நிலைதான் உள்ளது.

றோ அமைப்புக்கு வயது 21-தான் ஆனால், இந்த இருபத்தோரு ஆண்டுகளில் அரசியல் தலைவர்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்பஉளவுப்பிரிவுகள் செயலாற்றும் போக்கு வந்ததால், பல ரகசிய நடவடிக்கைகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

1968இல் இந்திராகாந்திபிரதமராக இருந்த போது தான் 'றோ' தொடங்கப்பட்டது. அதற்கு முன் ஐ.பி.மட்டுமே உண்டு. பிரிட்டனின் இரண்டு உளவுப் பிரிவுகளான எம்-15 சீக்ரட் இன்டெலிஜன்ஸ் சர்வீஸ் ஆகியவற்றுடன் நெருக்கமான உறவு ஐ.பிக்கு இருந்தது.

நேருஜி காலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு உளவு வேலைகள் முழுவதுமே ஐ.பி-யால் மேற் கொள்ளப்பட்டன. 1962 இல் சீனாவுடன் நடந்தபோருக்குப் பிறகுதான் தனித்தனி மைப்புகளைஏற்படுத்த முடிவாயிற்று.

சீனாவை உளவு பார்க்க ஐ.பி. அமெரிக்காவின் சி ஐ ஏ உதவியை நாடியது. இந்தியாவுக்கு எதிராக சி ஐ.ஏ செயல்படுவதாக நேருவின கட்சியில் சிலர் சத்தம்போட்டுக்கொண்டிருந்த வேளையில் தான்' சி ஐ ஏ -யுடன் கூட்டு நடவடிக்கையில் ஐ பி. ஈடுபட்டுக் கொண்டிருந்தது! சீனப் போரின்போது சரியான முன்னெச்சரிக்கை தரத் தவறியதாக இயக்குனர் மல்லிக் பழிக்குள்ளானார்.

> **சிம்ரஞ்சித்சிங் மான்**
>
> 'பஞ்சாப்பில் 'றோ' உளவு அமைப்பு ஒரு பயங்கரவாதக் குழுவைத் தானே நடத்தி வந்தது பற்றிப் பல விவரங்களைஅறிந்து வைத்திருந்த இளம் பத்திரிகையாளர் திரேன் பகத், திடீரென சாலை விபத்தில் எப்படி இறந்தார் என்பது பற்றி விசாரிக்க வேண்டும்' என்று அகாலிதள் (மான் பிரிவு) தலைவர் சிம்ரஞ்சித் சிங் மான் கோரியிருக்கிறார்.

அவரையடுத்துபொறுப்புக்கு வந்த ராம்நாத் காவ்(ஆர்.என் காவ்)தான் இப்போதுள்ள 'றோ' அமைப்பு உருவாகக் காரணமாக இருந்தவர். அதுவரை பிரிட்டிஷ் பாணியைப் பின்பற்றி வந்த உளவுத்துறை, பிறகு அமெரிக்கப் பாணியை மேற்கொண்டது.

'றோ' உருவானதிலிருந்தே ஐ.பி-க்கும் 'றோ' வுக்கும் இடையே கடுமையான விரோதம் ஏற்பட்டுவிட்டது. ஐ பி-யில் ஐ பி எஸ். தேர்வு எழுதி வந்த போலீஸ் அதிகாரிகளே பணியாற்றினார்கள். ஆனால், காவ் இதை விரும்பவில்லை,

'றோ' வுக்கு நேரடி நியமனம் செய்ய ஆரம்பித்தார் ஐ பி -யைவிடக் கூடுதலான சம்பளம், வசதிகள் 'றோ' அதிகாரிகளுக்குத் தரப்பட்டன 197 இல் காவ் பாதுகாப்புபிரிவின் சிறப்புச் செயலாளரானதும், புதிய உளவுப் பிரிவான ஏவியேஷன் ரிசர்ச் சென்டர் (ஏ.ஆர்.சி.) என்ற அமைப்பைத் தொடங்கினார். சீனா பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளிலுள்ள அவர்களின் தளங்களை விண்ணிலிருந்து துல்லியமாகப் படமெடுப்பதற்கான கருவிகள் இந்த மையத்துக்கு வரவழைக்கப்பட்டன. காவின் தலைமையில் றோ' வளர்ந்தது ஐ.பி-க்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட அதே வேளையில், 'றோ' வுக்கு முப்பது கோடி ரூபாய் தரப்பட்டது.

'றோ' ஐ பி, விரோதம் எந்த அளவுக்குப் போய்விட்டதென்றால்' இரண்டு அமைப்பினரும் ஒருவரை மற்றவர் உளவு பார்க்கிற நிலையே ஏற்பட்டது. சென்னையிலிருந்து 'றோ' அதிகாரி உன்னிக்கிருஷ்ணன், சி ஐ ஏ. ஏஜெண்டாகச் செயல்பட்டதாக கைது செய்யப்பட்டது நினைவிருக்கலாம் உன்னி பற்றி மேலிடத்துக்குத் தகவல் கொடுத்தது ஐ பி. அதிகாரிகள்தான்! மேலிடத்துக்கு மட்டுமல்ல, பத்திரிகையாளர்களுக்கு ஐ.பி-யும் 'றோ' வும் மாறி மாறி ஒருவரைப்பற்றி மற்றவர் தகவல் தருவது இப்போது சாதாரண விஷயமாகி விட்டது.

(தொடரும்)

---

# ஆரோக்கியமாக வாழ உடற்கல்வி அவசியம் தேவை

(கிளிநொச்சி)

கற்பிக்கப்படுகின்றன. அம்

அப்போது நகர மேயராக இருந்த ... வண. லோங் அடிகளார் போன்றவர்கள் தீர்மானித்து நூல்நிலையக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பெற்றது.

1950 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் (இப்பொழுது யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்) சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்விழா மூன்று தினங்கள் நடைபெற்றது.

டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, டாக்டர் அ.சினிவாசகராவ், டாக்டர் மு. வரதராசனார், கல்கி, பெரியசாமித்தூரன் போன்ற தமிழ்நாட்டு அறிஞர்களுடன் கட்டிடக்கலை நிபுணர் வி.எம் நரசிம்மனும் தென்னாபிரிக்காவிலிருந்து கண்ணபிரான் எம். பிள்ளை போன்ற வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த அறிஞர்களை நகர மேயர் சாம் சபாபதியும் மற்றும் நூல்நிலையக்குழு உறுப்பினர்களும் சந்தித்து உத்தேச புதிய நூல்நிலையம்பற்றி கலந்தாலோசனை செய்தனர்.

நூல்நிலையம் அமைவதற்கு உதவி செய்வதாக இங்கு வந்திருந்த தமிழ் அறிஞர்கள் உறுதியளித்தனர். கட்டிடக்கலைச் சிற்பி வி.எம்.நரசிம்மன் புதிய நூலகத்தின் கட்டிட அமைப்பை இலவசமாக அமைத்துத் தருவதாக வாக்குறுதியளித்தார். பின்னர் அதை நிறைவேற்றியும் கொடுத்தார்.

(நூல்நிலையம் அமைந்தபின்னரும்கூட திரு. நரசிம்மன் இடையில் வந்து முறையாகச் செயல்படவில்லை என்று சுட்டிக்காட்டி சில திருத்தங்களும் கூறிச் சென்றது குறிப்பிடத்தக்கது)

இந்த நூல்நிலையத்துக்கு யாழ்ப்பாணத்திலும் இலங்கையிலும் நிதி திரட்டப்பட்டது. நகர மேயர் சாம் சபாபதியும் மாநகரசபை உறுப்பினர்கள் சிலரும் வழக்குரைஞர்களும் வேஷம் போட்டு நகர மண்டபத்தில் நாடகம் ஒன்றையும் நடாத்தி மேடையேற்றி நிதி திரட்டியதும் உண்டு.

வண பிதா லோங் அடிகளார் வெளிநாடுகளில் சென்று நிதியுடன் நூல்களையும் திரட்டி வந்தார்.

இப்படி அரும்பாடுபட்டுக் கட்டியெழுப்பிய நூல்நிலையத்தை 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி சிறிலங்கா ஆயுதப் படையினர் தீ வைத்து அழித்தனர்.

பல அரும்பெரும் நூல்கள் சாம்பராகின. கட்டிடம் சிதைந்து கிடக்கிறது.

உலகின் கண்டனத்திலிருந்து தப்புவதற்கு நூல்நிலையத்தைப் புதுப்பிப்பதற்கு நிதி உதவியளிப்பதாக அன்றைய ஜனாதிபதி உறுதியளித்தார். அது காற்றில் பறந்துவிட்டது.

இந்த நூல்நிலையம் இனியும் சிதைந்தபடி கிடக்க விடக்கூடாது; விட முடியாது.

சிறிலங்கா அரசிடமிருந்து நஷ்டஈடு பெற வேண்டும். இதேசமயம் இந்த அக்கிரமத்தை வெளிநாடுகளுக்கு எடுத்துக்கூறி நிதி திரட்டி முதலில் திரு. நரசிம்மன் உருவாக்கிய அமைப்பிலான நூல்நிலையம் புதுப் பொலிவுடன் விரைவில் எழுப்பப்பட வேண்டியது அவசியம்.

தால் ராமராவ் முகமெல்லாம் புன்னகை'...!என்றார் திரேன் பகத். அடுத்த ஒரு மணி நேரப் பேட்டியில் திரேனிடம், தன்னைக் கொமேனி என்றெல்லாம் வர்ணித்துக் கொண்டுவசமாக மாட்டினார் ராமராவ்.

திரேனின் முக்கிய செய்திகளில் ஒன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இந்திய அரசு ஐம்பதுலட்சரூபாய் கொடுத்து ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்துக்குச் சம்மதிக்கச் சொன்னதாக இந்தியத் தூதர் டிக்சித் பேட்டியில் தெரிவித்ததாகும்.

இதுபோன்று திரேன் அம்பலப்படுத்திய இன்னொரு செய்திதான் அவருடைய திடீர் சாவுக்குக் காரணமாகிவிட்டது என்கிறார் மான்.

1987 நவம்பர் 19ஆம் திகதி இந்திரா காந்தியின் பிறந்த தினம். டெல்லி விமானநிலையத்துக்கு வழக்கமாக ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து வந்து போகும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் வந்து சேர்ந்தது. பயணிகள் வெளியேறினார்கள்.

சரக்குகளை இறக்கி வைக்கும் ஊழியர்கள் ஒவ்வொரு சரக்குப் பெட்டியாக இறக்கிக் கொண்டிருந்தபோது, ஒரு பெட்டியிலிருந்து குண்டுகள் சிதறி ஓடின.

விமான நிலையமே பரபரப்பில் ஆழ்ந்தது. நிலைய பொலிஸ் டெபுடி கமிஷனர் ஆர். கே. நியோகி என்பவர் வந்தார். இருபத்திரண்டு கிரேட்டுகளும் கவனமாகச் சோதனையிடப்பட்டன. அவற்றில் பல்வேறு விதமான ஆயுதங்கள், ராக்கெட் ஏவுகணைகள் இருந்தன. சரக்குப் பெட்டிகளின் மீது அனுப்புபவர் முகவரியாக ஆப்கானிஸ்தான்நாட்டு கம்யூனிகேஷன்ஸ் டைரக்டர் ஜெனரல் பெயர் இருந்தது. பெறுபவர் பெயர்? டைரக்டர் ஜெனரல் ஆஃப். கம்யூனிகேஷன்ஸ், சன்சார் பவன் புதுடெல்லி! (இந்திய அரசில் டைரக்டர் பதவிதான் உண்டே தவிர, டைரக்டர் ஜெனரல் என்ற பதவியே கிடையாது!.)

ஏதோ ஒரு தீவிரவாதக்குழு பொய் முகவரிகளைப் பயன்படுத்தி ஆயுதங்களை வரவழைத்திருக்கக்கூடும் என்று பொலிஸ் அதிகாரிகள் கருதினார்கள். ஆயுதங்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அப்போது திடீரென ஓர் உயர் அதிகாரி அங்கு விரைந்து வந்தார். தான் மத்திய அரசின் உளவுப் பிரிவான 'றோ' (ரிசர்ச் அண்ட் அனாலிசிஸ் விங்) அமைப்பைச் சேர்ந்தவர் என்று அடையாள அட்டையைக் காட்டினார். வந்திருக்கும் சரக்கு தங்களுடையது என்று கூறி அவற்றை அவர் எடுத்துக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்து ...தன.

இந்தச் செய்திகள் வெளியான மறுநாள் பாராளுமன்றத்தில் ராஜீவ் அரசு, 59ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. இதன்படி, பஞ்சாபில் அவசர நிலை பிரகடனம் செய்யவும், பஞ்சாப் தொடர்பாக எந்தப் பகுதியிலும் அவசர நிலைக்கு உத்தரவிடவும் அடிப்படை உரிமைகளை ரத்துச் செய்யவும் வழிவகுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசிய காங்கிரஸ் எம். பி-க்கள் பலரும் பஞ்சாபில் தீவிரவாதிகள் ராக்கெட் ஏவுகணைகளைப் பயன்படுத்துவதையே சுட்டிக் காட்டினார்கள்.

நவம்பர் 19 ஆம் திகதி நிகழ்ச்சியை வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்தியவர் திரேன் பகத். 1988 ஏப்ரல் 24 ஆம் திகதி லண்டன் ஒப்சர்வரிலும், இண்டியன் போஸ்ட்டிலும் அவருடைய ரிப்போர்ட் வெளியாயிற்று. மே 5 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் இதுபற்றிச் சில உறுப்பினர்கள் கேள்வி கேட்டார்கள். அப்போது 'றோ' அமைப்பை நிர்வகிக்கும் உள்துறை இணை அமைச்சரான ப. சிதம்பரம் 'றோ' சரக்குகளை வரவழைத்தது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டார். ஆனால், பஞ்சாப் தீவிரவாதிகளுக்குச் சென்றதாகக் கூறுவதை அவர் மறுத்தார்.

### கார் விபத்தில் மாண்ட பத்திரிகையாளர்

ஏழு மாதங்களுக்குப் பிறகு 1988 நவம்பர் 24ஆம் திகதி அதிகாலையில் திரேன் பகத் டெல்லி விமானநிலையத்துக்குச் செல்லும்போது கார் விபத்தில் இறந்துபோனார். அப்போது அவருக்கு வயது முப்பத்தொன்றுதான்.

பஞ்சாப்பில் 'றோ' செய்து வந்த பல தில்லுமுல்லு விவகாரங்களைப் பற்றி திரேன் பகத் மேலும் தகவல் சேகரித்து வைத்திருந்தார். அவை வெளியாகாமல் தடுக்கவே, அவர் ஒரு ஜோடனையான சாலை விபத்தில் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று அகாலிதள்த் தலைவர் மான் கருதுகிறார்.

அரசாங்கத்தின் உளவுப் பிரிவு என்பது சாணக்கியன் காலத்திலிருந்தே உண்டென்றாலும் இப்போதைய நவீன கால அரசாங்கத்தின் உளவுப் பிரிவு இந்தியாவில் உருவாகி நூற்றியொரு வருடங்களாகின்றன. ஒரு நூற்றாண்டாகியும்கூட உளவுப் பிரிவுகள் செயல்படும் விதம் பற்றி, அவற்றின் அத்துமீறல்களைப் பற்றி ஜனநாயக நாட்டில் ஆய்வு செய்யவழிகள்இல்லை. அசோகா ரெய்னா எழுதிய ஒரு நூல், குல்தீப் நய்யார், நிர்மல் மித்ரா, ரீட்டு சாரின் ...வீஸ் ஆகியவற்றுடன் நெருக்கமான உறவு ஐ.பி.க்கு இருந்தது.

நேருஜி காலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு உளவு வேலைகள் முழுவதுமே ஐ.பி-யால் மேற் கொள்ளப்பட்டன. 1962 இல் சீனாவுடன் நடந்தபோருக்குப் பிறகுதான் தனித்தனி மைப்புகளைஏற்படுத்த முடிவாயிற்று.

...காவ்)தான் இப்போதுள்ள 'றோ' அமைப்பு உருவாகக் காரணமாக இருந்தவர். அது வரை ரிட்டிஷ் பாணியைப் பின்பற்றி வந்த உளவுத்துறை, பிறகு அமெரிக்கப் பாணியை மேற்கொண்டது.

'றோ' உருவானதிலிருந்தே ஐ.பி-க்கும் 'றோ'வுக்கும் இடையே கடுமையான விரோ... ...காரிகள்தான்! மேலிடத்துக்கு மட்டுமல்ல, பத்திரிகையாளர்களுக்கு ஐ.பி-யும் 'றோ'வும் மாறி மாறி ஒருவரைப்பற்றி மற்றவர் தகவல் தருவது இப்போது சாதாரண விஷயமாகிவிட்டது.

(தொடரும்)

# நல்ல சமுதாயம் உருவாக ஆசிரியர்உழைக்க வேண்டும்

(விசேடநிருபர்)

''ஆசிரியன் என்பவன் இவ்வுலகிற்கும் மறுவுலகிற்கும் பாலமாக அமைகிறான். கடமையை நன்குஉணர்ந்துமாணவர்களின் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.''

குருநகர் சென் ஜேம்ஸ்மகா வித்தியாலயத்தில் 36 வருடங்கள் ஆசிரியப்பணிபுரிந்து ஒய்வு பெற்றுச் செல்லும் எ. யோண்பிள்ளை, பி. பிரகாசம் ஆகிய இரு ஆசிரியர்களும் வித்தியாலயத்தில் ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் நடத்தப்பட்ட பிரியா விடை வைபவத்தில் அதிபர் திரு.அ. ஸ்ரனிஸ்லோஸ்மேற் கண்டவாறு கூறினார்.

திரு. அன்ரனிஸ்லோஸ் தொடர்ந்து பேசுகையில் நல்லொழுக்கம், பண்பு, அறிவு என்பவற்றைத் தன்நலம் கருதாது மாணவர்களுக்குப் புகட்டி வருங்கால நல்லசமுதாயத்தை கட்டிஎழுப்புபவனாகஆசிரியன் திகழ வேண்டும் என்றார்.

ஆசிரியர்கள் க.தம்பிமுத்து, கே.எ. செபஸ்தியாம்பிள்ளை, பி.டானியல் மாணவர் சார்பில் செல்வன் சூ.அருள்நாதன் ஆகியோர் சேவை நலம் பாராட்டிப் பேசினர். (21)

# ஆரோக்கியமாக வாழ உடற்கல்வி அவசியம் தேவை

(கிளிநொச்சி)

''பதுங்கி நின்று தாக்குவதும், புறமுதுகு காட்டிச் செல்வதும் வீரமாகாது. நேருக்கு நேர் நின்று எவன் மோதுகிறானோ அவனே வீரன்.''

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு க. சந்தசாமி மேற்கண்டவாறு கூறினார்.

உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு ம. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கிளிநொச்சிக் கல்வி அதிகாரி திரு பொன் சபாபதி, மக்கள் முன்னணியின் மாணவர் அவை அமைப்பாளர் திரு. நிமால் ஆகியோர் குத்துவிளக்கை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தனர்.

கல்விப்பணிப்பாளர் திரு. கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தோட்டம் கொத்துவதாலும், வயலில் வேலை செய்வதாலும்கூடஉடல்உறுதிபெறுகிறது. ஆனால் பாடசாலைகளில் மாணவர்களின் உடல் உறுதி பெறுவதற்காக ஒழுங்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

உடல் உறுதி பெறுவதால் மட்டும் எதையும் சாதித்துவிடமுடியாது. ஒழுங்கான பயிற்சியால் தான் எதையும் சாதிக்க முடியும்.

வயல் வெளியில் வேலை செய்யும் போது அபாயம் ஒன்று ஏற்பட்டால் ஓடித்தப்பவோ, உயர்ந்த வேலிகளைத் தாண்டிப் பாய்ந்து தப்பித்துச் செல்லவோ தக்க பயிற்சிகள் அளிக்கப்படுவதில்லை ஆதலால் அவர்கள் உடல் பலம் இருந்தும் அபாயத்தில் சிக்கி மடிய வேண்டி வரும்.

பாடசாலைகளில் உயரம் பாய்தல், நீண்டதூர ஓட்டம், தடைதாண்டிப் பாய்தல் மல்யுத்தம், குத்துச் சண்டை, கராட்டி போன்றவை ஒழுங்கான முறையில் கற்பிக்கப்படுகின்றன. அம் மாணவர்கள் அபாயம் ஏற்படும் போதுதாம் கற்ற வித்தையைக் கொண்டு உயிர் தப்பிச் செல்ல முடியும்.

மூளைவளர்ச்சிக்கு கல்வி எவ்வளவு முக்கியமோ அதே போல ஆரோக்கிய வாழ்விற்கு உடற்பயிற்சி அவசியமாகும். ஆதலால் சகல இளைஞர் யுவதிகளும் ஒழுங்காகக் கற்பிக்கும் உடற்பயிற்சிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

போரில் எதிர்த்து வெற்றியடையும்வீரர்களைப் போன்று விளையாட்டுப் போட்டிகளிலும் சக வீரர்களை எதிர்த்து வெற்றி பெறவேண்டும்.

போட்டிகளைக் கண்டு அஞ்சி ஓடாது போட்டிக்கு முகம் கொடுத்து எதிரிகளை வெற்றி பெற வேண்டும் என்றார்.

அன்பு இல்லம் முதலாம் இடத்தையும் அருள் இல்லம் இரண்டாம் இடத்தையும், ஆனந்தம் இல்லம் மூன்றாம் இடத்தையும்பெற்றன. (49)

# மட்டுநகர் பாடசாலைகளில் மதிய உணவு முத்திரைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரை இன்னும் சில நாட்களில் விநியோகம் செய்யப்படும் என சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு இரா. தியாகராசா கூறினார்.

மட்டக்களப்பு கோட்டம் 50476, வாழைச்சேனைகோட்டம் 23079, களுவாஞ்சிகுடி கோட்டம் 26191, என்ற எண்ணிக்கையில் இம்மாவட்டத்தில் 99765 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

மாணவர்கள் விபரங்கள் திரட்டி அறிவிக்குமாறு உதவி அரச அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள் மே மாதத்திற்கான முத்திரை இம் மாதம் வழங்கப்படும்.

பாடசாலை அதிபர்கள் மாணவர் விபரங்களை சமர்பித்து உதவி அரச அதிபரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் கூட்டுறவு கடைகளில் மதிய உணவு பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். கூட்டுறவுக் கடைகள் உதவி அரச அதிபர்கள் மூலம் சமூக சேவை இலாகாவிடம் அம்முத்திரைகளை சமர்ப்பித்து கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (37)

# அக்கராயன்குளம் பகுதிகளில் கோமாரி தடுப்பூசி வேலைகள்

(கிளிநொச்சி)

அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மூவாயிரம் மாடுகளுக்கு கோமாரி தடுப்பு ஊசி ஏற்றப்பட்டது. தொடர்ந்தும ஏற்றப்பட்டு வருகிறது.

ஸ்கந்தபுரம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி பி. தங்கராசா தலைமையிலான குழுவொன்று தடுப்பூசி ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது.

நாட்டில் விசர் நாய்க் கடியைக் கட்டுப் படுத்தும் முகமாக விசா நாய்த் தடுப்பூசியும் ஏற்றப்பட்டு வருகிறது.

ஸ்கந்தபுரம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தைச் சேர்ந்த திரு. கே. சாந்தலிங்கம் தலைமையிலான குழு ஒன்று தடுப்பூசி ஏற்றுவதற்கான சகல வசதிகளையும் வைத்தியக்குழுவிற்குச் செய்து கொடுத்துள்ளது. (49)

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த் தொகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களின் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை கல்வியங்காடு ஸ்ரார் பியூப்பிற் அக்கடமியில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

# வட்டக்கச்சியில் ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட சிவாலயம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சி பிரதேசத்தில் யாழ் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுப் பிரிவு மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் சுமார் ஓராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவாலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி குடியேற்றத்திட்ட பகுதியில் நடந்த இருவாரங்களாக மேற்கொண்ட தொல்லியல் ஆய்வு ஒன்றின் விளைவாக புராதன இந்து ஆலயம் ஒன்றின் கட்டட சிதைவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் செ. கிருஷ்ணராஜா அவர்களால் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கண்டுபிடிப்புப் பற்றி அவர் கூறும்பொழுது வட்டக்கச்சி பிரதேசத்தில் உள்ள ''மாயவனூர்'' என்றழைக்கப்படும் கிராமத்தில் இந்து ஆலய கட்டட சிதைவுகளும், அதன் அத்திவாரப் பகுதிகள் போன்றன அடையாளம் காணப்பட்டுள்ளன.

இக் கட்டிட சிதைவுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மிகப் பழைய செங்கட்டிகளின் தன்மையினை உருத்திரபுரம் சிவன் கோயிலில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட செங்கட்டிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது அவை இரண்டுவகையும் ஒரே தன்மை உடையனவாக இருப்பதை உறுதிப்படுத்த முடிந்தது என்றார்.

மேலும் அதுமாத்திரமன்றி ''மேசன் மார்க்'' (''MASON MARK'') என அழைக்கப்படும் தமிழ் எழுத்தில் அந்தக் குறியீடுகளைக் கூட இவ்விரு கோயில்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட செங்கட்டிகளில் காணமுடிந்தது.

இவற்றின் பிரகாரம் இவ்விரு கோயில்களும் ஒரே காலப் பகுதியில் கட்டப்பட்டிருந்தன என்பதையும் அவற்றின் அடித்தள மண்டபங்களிலும் கற்பக்கிரகத்தினதும் அமைப்புகள் ஒரேமாதிரியாய் அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

மாயவனூர் என்ற கிராமத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கம் மம்மில் குளம்என அழைக்கப்பட்டுவருகின்றதுகுளக்கட்டின்அழிபாடுகளையும் அப்புராதன இந்து ஆலய அழிபாடுகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது அவை இரண்டும் ஒரே காலத்தில் அமைக்கப்பெற்றிருந்தன என்பதனையும் ஊர்ஜிதம்செய்து கொள்ள முடிந்தது.

இதேபோன்று உருத்திரபுரம் சிவன்கோயில் அமைந்துள்ள கிராமப்பகுதி சிவனூர் என தற்காலம் வரை அழைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு நோக்கிய திசையில் அமைந்து காணப்படும் மம்மில் குளத்தடி கோயிலின் அடித்தள அமைப்பு பெருமளவிற்கு சிதைக்கப்பட்டிருந்த போதிலும் செங்கல்லினாலும் கருங்கல்லினாலும் பாவப்பட்ட அடித்தள அமைப்பினையும், சுற்றாடலில் ஆங்காங்கு புதையுண்டு காணப்படும் கருங்கல்லினால் ஆன இந்துக்கோயிலுக்குரிய தூண்கள், பீடங்கள், துவாரமிடப்பட்ட பெருங்கற்கள் என்பன திட்டவட்டமாக அங்கு ஒரு புராதன இந்து ஆலயம் அமைந்திருந்தது என்பதனை பறைசாற்றி நிற்கின்றன.

எனவே மம்மில் குளம் அக்கோயிலுக்குரிய திருக்குளமாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஒரு பெரும் கோயில் குடியிருப்பு ஒன்று அப்பகுதியில் இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததாக இவ்வுறுப்புகள் சான்று காட்டி நிற்கின்றன.

தொடர்ந்தும் இப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் தொல்லியல் மேலாய்வுகளினதும் அகழ் வாய்வுகளினதும் அடிப்படையில் பல தகவல்களைப் பெறக் கூடியதாய் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (லோ)

## முத்தையன்கட்டு பஸ்சேவை இடைவழியில் நின்றுவிடும்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து முத்தையன்கட்டிற்குத் தினமும் நல்லதொருபஸ்சேவையை நடாத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுமார் 90 மைல் தூரமான யாழ். முத்தையன்கட்டுக்கு அனுப்பப்படும் பஸ் மிகவும பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது

தினமும் ஒரு சேவையை மேற்கொள்ளும் இந்த பஸ் ஆகக்குறைந்தது ஒரு நாளைக்கு 180 மைல் தூரத்துக்கு ஓடவேண்டியுள்ளது.

மிகவும் பழுதடைந்த பஸ் ஒன்றே இச்சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள், பஸ் அடிக்கடி பழுதடைவதால் குறிப்பிட்ட நேரத்திற்குப் போகவேண்டிய இடத்திற்குப் போகமுடியாது மூட்டை முடிச்சுகளுடனும், பிள்ளை குட்டிகளுடனும், கொதிக்கும் வெய்யிலில் பல மணி நேரத்தை வீதியிலேயே கழிக்கிறார்கள்.

இதுதவிர, கடந்த சில நாட்களாக அபபாதைக்கு பஸ் சேவை இல்லாததால் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

பின் இம்மாதம் முதலாம் திகதி ஒரு பஸ் சேவையிலீடுபடுத்தப்பட்டது. அந்த பஸ்சும் வழியில் பழுதடைந்தது. அதனால் பிரயாணிகள் பல மணி நேரம் கஷ்டப்படவேண்டியேற்பட்டது.

இப்பாதைக்கு நல்லதோர் பஸ் சேவை நடத்தப்பட வேண்டுமெனப் பொதுமக்கள் விரும்புகின்றனர். (49)

## ஹஜ் யாத்திரிகர்களுக்கு மருத்துவப்பெட்டி அவசியம்

(மக்கா)

சவூதி அரேபியாவுக்கு புனித ஹஜ் யாத்திரை செல்லும் முஸ்லிம்கள் மருத்துவ தகவல் அடங்கிய அடையாளப்பெட்டிகளை அணிந்துகொள்ளவேண்டுமென சவூதி அரேபிய அரசு

இம்முறை வழமையை விட அதிகமான யாத்திரிகர்கள் இங்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு




## காது, மூக்கு, தொண்டை பரிசோதனைக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் அமைந்துள்ள காது, மூக்கு, தொண்டை பரிசோதனை நிலையப் பகுதிக்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது யாழ் போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதியின் மேல் மாடிக் கட்டடத்தில் இயங்கி வரும் இப்பகுதி வைத்தியசாலை வீதியால் செல்லும் வாகனங்களின் பேரிரைச்சல் காரணமாக இங்கு நோயாளர்கள் பெரும் அவஸ்தைக் குள்ளாவதைக் கவனத்திற் கொண்டு இப்பகுதி தொலைபேசி மாற்று நிலையத்திற்கு அருகாமையில் மாற்றப்பட உள்ளது. இதற்கான கட்டட அமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (ம)

## பாராளுமன்ற குண்டு வெடிப்பு விசாரணை

(கொழும்பு)

1987 ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இன்று திங்கட் கிழமை மேல் நீதி மன்ற நீதிபதிகள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

## ''பிள்ளைகளும் சுற்றாடலும்''

(கொழும்பு)

நாளை நடைபெறும் உலக சுற்றாடல் தினத்தின் போது ''பிள்ளைகளும் சுற்றாடலும்'' என்ற விடயம் பற்றி முக்கிய கவனம் செலுத்தப்படும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக சுற்றாடல் அதிகாரசபை மாகாண கல்வி அமைச்சுகளின் உதவியுடன் சகல பாடசாலைகளிலும் விசேட நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில்சுற்றாடலின் முக்கியத்துவம் பற்றிக்கூறப்படும்.

### சமகால

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பேச்சாளர் டொமினிக் மேலும் பேசுகையில்,

எமது தலைவர் வே. பிரபாகரன் ஒருமுறை கூறினார் தமிழீழ மண்ணை எம்மால் மீட்க முடியும், தமிழீழ எல்லைகளை எம்மால் பிடிக்க முடியும். ஆனால் சுதந்திர தமிழீழத்தை நிர்மாணிக்க வேண்டியவர்கள் எழுத்தாளர்களே என்று கூறினார். தலைவரின் கருத்தைப் புரிந்து

### மட்டக்களப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து மாவட்டப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போதுமட்டக்களப்புமாவட்ட பாதுகாப்பு இராணுவ முகாம்கள், நிர்வாகப் பிரச்சினைகள் பற்றிப் பேசப்படலாம் எனத்தெரிகின்றது.

இதேபோன்று வாராவாரம் வடக்குக் கிழக்கு மாகாண மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் சென்று அங்குள்ள நிலைவரங்கள் பற்றி அரசு தரப்பினரும், விடுதலைப்புலி

## காசோலை மோசடி

வேண்டும்.

சுமார் 90 மைல் தூரமான யாழ். முத்தையன்கட்டுக்கு அனுப்பப்படும் பஸ் மிகவும பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது

தினமும் ஒரு சேவையை மேற்கொள்ளும் இந்த பஸ் ஆகக்குறைந்தது ஒரு நாளைக்கு 180 மைல் தூரத்துக்கு ஓடவேண்டியுள்ளது.

மிகவும் பழுதடைந்த பஸ் ஒன்றே இச்சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள், பஸ் அடிக்கடி பழுதடைவதால் குறிப்பிட்ட

கழிக்கிறார்கள்.

இதுதவிர, கடந்த சில நாட்களாக அபபாதைக்கு பஸ் சேவை இல்லாததால் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

பின் இம்மாதம் முதலாம் திகதி ஒரு பஸ் சேவையிலீடுபடுத்தப்பட்டது. அந்த பஸ்சும் வழியில் பழுதடைந்தது. அதனால் பிரயாணிகள் பல மணி நேரம் கஷ்டப்படவேண்டியேற்பட்டது.

இப்பாதைக்கு நல்லதோர் பஸ் சேவை நடத்தப்பட வேண்டுமெனப் பொதுமக்கள் விரும்புகின்றனர். (49)

# காசோலை மோசடி சட்டத்தரணி 50,000பிணையில்

(கொழும்பு)

காசோலை மோசடி தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சட்டத்தரணி ஐம்பதினாயிரம் ரூபா பிணையில செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பத்தரமுல்லவைச்சேர்ந்த ஆர் எம். விமலசந்திரசிறி என்ற சட்டத்தரணிகொழும்பு பிரதம நீதிவானின் பிடியாணையைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இந்த சட்டத்தரணியை தினமும் பொலிஸில் பதிந்து செல்லுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த சட்டத்தரணி ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான வங்கிக் கணக்கு முடிந்த இரு காசோலைகளை ஒரு வர்த்தகருக்கு வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

# ரயில் சிற்றுண்டிச்சாலைகளை ரயில்வே பகுதி பொறுப்பேற்பு

(கொழும்பு)

ரயில்களிலும், ரயில்நிலையங்களிலும் நடாத்தப்பட்டு வந்த சிற்றுண்டிச் சாலைகளை மீண்டும் ரயில்வேதிணைக்களம் பொறுப் பேற்கவுள்ளது.

இவற்றை நடாத்தி வந்த ரயில்வே சிற்றுண்டிச் சேவை நிறுவனம் இருபத்தொரு லட்சம் ரூபாவுக்கு மேல் ரயில்வே திணைக்களத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது.

ஆனால் இந்தப் பணத்தை இன்னமும் செலுத்தப்படாததாலேயே மீண்டும் ரயில் வே திணைக்களம் இதனை நடத்த எண்ணியுள்ளது.

# பெரஸ்ரோய்கா சிங்களத்தில் மொழிபெயர்ப்பு

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் பொருளாதார சீரமைப்பு பற்றி கொர்பசேவ் எழுதிய நூல் சிங்களத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

இம்மொழிபெயர்ப்பின் நூலுக்கு ஜனாதிபதி பிரேமதாசா முன்னுரை வழங்கி இருக்கிறார். அதில் அவர் ''சோவியத் யூனியனில் கடந்த காலங்களில் அரசியல் சித்தாந்தங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாதது குறித்துப் பலரும் ஏமாற்றம் கொண்டிருந்தனர். சோவியத் யூனியனின் ஜனாதிபதியாக ஐந்து வருடங்களுக்கும் குறைவாக ஆட்சியில் இருந்துவரும் கொர்பசேவ் இந்த நி[...]மையை மாற்ற வேண்டி உ[...]ளார் என்று குறிப்பிட்டுள்ள[...]ர்.

இந்நூல் வெளியீட்[...] விழாவில் கலந்து கொண்[...] இலங்கைக்கான சோவி[...]வர் பூரிகபே சோ[...]ய[...]னிய னின் ''மறுசீரமைப்பு[...]கொள்கையில் ஜனாதிபதி பிரேமதாசா மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் என்பதை நாம் நன்கு அறிவோம் என்று குறிப்பிட்டுப் பேசினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அமைக்கப்பெற்றிருந்தன என்பதனையும் ஊர்ஜிதம்செய்து கொள்ள முடிந்தது.

இதேபோன்று உருத்திரபுரம் சிவன்கோயில் அமைந்துள்ள கிராமப்பகுதி சிவனூர் இருக்கும் தொல்லியல் மேலாய்வுகளினதும் அகழ் வாய்வுகளினதும் அடிப்படையில் பல தகவல்களைப் பெறக் கூடியதாய் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (லோ)

# ஹஜ் யாத்திரிகர்களுக்கு மருத்துவப்பெட்டி அவசியம்

(மக்கா)

சவூதி அரேபியாவுக்கு புனித ஹஜ் யாத்திரை செல்லும் முஸ்லிம்கள் மருத்துவ தகவல் அடங்கிய அடையாளப்பெட்டிகளை அணிந்துகொள்ளவேண்டுமென சவூதி அரேபிய அரசு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்

அவசர தேவைகளின்போது உடனடி வைத்திய சேவைக்காகவே இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இம்முறை வழமையை விட அதிகமான யாத்திரிகர்கள் இங்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மது போதையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அங்கும் அந்த ஊழியர்கள் தம்மைத் தூக்கிச் சென்று தாக்கியதாகவும் முறையிட்டுள்ளனர்.

மேலும் வைத்தியசாலையில் தம்மைத் தாக்க வந்த போது இடைபறித்த வைத்தியர்களையும் இவர்கள் தாக்கி உள்ளதாகவும் இவ்விரு மாணவர்களும் கூறியுள்ளனர்.

குமாரவேலு உதயகுமார், சின்னத்தம்பி மகேந்திரன் ஆகிய இவ்விருவரினதும் நிலைமை மோசமாக இருந்தமையால் நெடுந்தீவு வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ)

## பயிலுனர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகப் பரீட்சையில் முறைகேடான முறையில் தெரிவுசெய்யப்பட்ட நியமனங்கள் ரத்துச் செய்யப்படுமிடத்து அவ்வெற்றிடங்களுக் மேன்முறையீட்டு விசாரணையில் தெரிவு செய்யப்படுபவர்கள் நியமிக்கப்படுவர் எனவும், இதன் காணமாகவே பயிலுனர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் வழங்கல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், நேர்முகப் பரீட்சையின் பின்பே இச்சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் நியமனமான பயிலுனர் ஆசிரியர்களுக்கு மேற்படி சான்றிதழ்கள் இதற்கு முன் வழங்கப்பட்டமைஇங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

## பிறப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாளர்நாயகத்தின் அலுவலகத்தில் இருந்து மாளிகாவத்தைக்கு அனுப்பப்பட்ட நூறு பிறப்புச்சாட்சி பத்திரப் புத்தகங்களில் ஒன்றே மேற்படி பிடிபட்ட புத்தகமாகும்.

இது தொடர்பாக ஐவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## ஊழியர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கால்களையும்இழந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

1989ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஊழியர் நம்பிக்கை நிதிய உறுப்பினர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர் இவர்கள் நைஜீரியா சென்று அந்நாட்டில இரண்டு வாரங்கள் தங்கியிருந்த பிறகு, மறுபடியும் இத்தாலிக்குள் கள்ளத்தனமாக நுழைய முயற்சித்த போது பிடிபட்டு ஸ்ரீலங்காவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இத்தாலியப் பெண் ஒருவரைத் திருமணம் செய்திருக்கும் விமானம் ஓட்டி, இத்தாலியில் வேலை பெற்றுத் தருவதாகச் சொல்லி ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா ஒரு லட்சத்துக்கு மேலாக வாங்கியுள்ளார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுமுறையில் இலங்கை வந்துபோகும் இந்த ஏமாற்று நபரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

நீர்கொழும்புப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவில் மேற்படி விடயம் தொடர்பாக இளைஞர் முறைப்பாடு செய்துள்ளனர்.

விமானம்ஓட்டி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரைப் போல் பாவனை செய்து இளைஞரை ஏமாற்றியுள்ளாராம்.

## சமகால

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பேச்சாளர் டொமினிக் மேலும் பேசுகையில்,

எமது தலைவர் வே. பிரபாகரன் ஒருமுறை கூறினார் தமிழீழ மண்ணை எம்மால் மீட்க முடியும், தமிழீழ எல்லைகளை எம்மால் பிடிக்க முடியும். ஆனால் சுதந்திர தமிழீழத்தை நிர்மாணிக்க வேண்டியவர்கள் எழுத்தாளர்களே என்று கூறினார். தலைவரின் கருத்தைப் புரிந்து கொண்டு எமது போராட்டத்திற்கு உணர்வூட்டி உயிரூட்ட வேண்டிய அந்தப் புனிதப் பணியை எழுத்தாளர்களே மேற்கொள்ள வேண்டும்.

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர் தமது மக்களின் உணர்வுகளை தமது நூலில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். அம்மக்களின் வேதனைகளை, சோதனைகளை உயிர்த் துடிப்புடன் இந்நூலில் பிரதிபலித்துள்ளார். இது போன்ற நூல்கள் இன்னும் வெளிவரவேண்டும். நூலாசிரியரின் பணி தொடர வேண்டும் என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவைச் சேர்ந்த புதுவை இரத்தினதுரை பேசுகையில்,

ஆயுதங்களை மட்டும் வைத்துப் போராட்டத்தை மேற்கொள்ள முடியாது; போராட்டத்தை, போராட்ட உணர்வுகளை உயிரூட்டத்துடன் அடுத்த தலைமுறைக்கு ஒப்புவிக்க வேண்டும். இப்பணி எழுத்தாளர்களால் மட்டுமே முடியும்.

எழுத்தாளர்கள் போராட்டத்தை. போராளிகளை முற்றுமுழுதாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ஆயுதப் போராட்டத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். இதுவரை எந்தவொரு எழுத்தாளரும் எமது முகாம்களில் இவற்றை அறிய முன்வரவில்லை என்றார்.

கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பொ. ஐங்கரநேசன், டாக்டர் மா. வசந்தமாலா, செம்பியன் செல்வன், செல்வி மைதிலி அருளையா, அ. யேசுராசா, திருமலை நவம் ஆகியோர் உரையாற்றினர்.

நூலாசிரியர் சித்திரா நாகநாதனின் பதிலுரையும் தேனீக்கள் பிரதிநிதி பா. சபேசனின் நன்றியுரையும் இடம் பெற்றன. (மு)

## மட்டக்களப்பு...

(1ஆம் பக்கத் தொர்டர்ச்சி)

சந்தித்து மாவட்டப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போதுமட்டக்களப்புமாவட்ட பாதுகாப்பு இராணுவ முகாம்கள், நிர்வாகப் பிரச்சினைகள் பற்றிப் பேசப்படலாம் எனத்தெரிகின்றது.

இதேபோன்று வாராவாரம் வடக்குக் கிழக்கு மாகாண மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் சென்று அங்குள்ள நிலைவரங்கள் பற்றி அரசு தரப்பினரும், விடுதலைப்புலிகள் தரப்பினரும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள விருப்பதாக நேற்று முன்தினம் அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் முடிவெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பை அடுத்து அடுத்தவாரம் திருக்கோணமலையில் இச்சந்திப்பு நிகழும் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை இன்று பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அன்ரன் பாலசிங்கம், யோகரெட்ணம் யோகி ஆகியோர் மாலையே யாழ்ப்பாணம் திரும்புவார்கள் எனவும் தெரிகின்றது.

## வெளிநாட்டுத்தூதுவர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசினார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த முதல் செயலாளரும் இவர்களைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்ததுடன் வடக்கு-கிழக்கு பகுதிகளின் அபிவிருத்தி பற்றியும் இவர்கள் ஆலோசனை நடத்தியதாகத் தெரியவருகிறது.

## ஆறாவது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தாலும் அந்தப் பழியை எதிர்க்கட்சிகள் மீதே போட்டுவிடலாம் என்றும் அரசாங்க வட்டாரங்கள் கருதுவதாகவும் தெரிகிறது.

இதேசமயம் ஈழவர் ஜனநாயக முன்னணி போன்ற பிரிவினைவாதக் குழுவொன்று கொண்டுவரும் பிரேரணையைத் தாங்கள் ஆதரிக்க முடியாத நிலையிலிருப்பதாக எதிர்க்கட்சிகள் விளக்கமளிக்கக் கூடுமென்பதற்காகவும் அரசாங்கமே இப்பிரேரணையைக் கொண்டுவரத் தீர்மானித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

# சுற்றாடலும்''

(கொழும்பு)

நாளை நடைபெறும் உலக சுற்றாடல் தினத்தின் போது ''பிள்ளைகளும் சுற்றாடலும்'' என்ற விடயம் பற்றி முக்கிய கவனம் செலுத்தப்படும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக சுற்றாடல் அதிகாரசபை மாகாண கல்வி அமைச்சுகளின் உதவியுடன் சகல பாடசாலைகளிலும் விசேட நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில்சுற்றாடலின் முக்கியத்துவம் பற்றிக்கூறப்படும்.

## போராளிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மெழுகு வர்த்தி'' நினைவுச் சின்னமும்

அச்சுவேலி – சங்கானை வீதிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மேஜர் அல்பேட் (கந்தையா ரூபநிதி) நினைவுத் தூபியும்

போராளிகள் நினைவுச் சுவர்ச்சித்திரமும் திறந்து வைக்கப்படவுள்ளது.

பிற்பகல் அச்சுவேலி பஸ் நிலையத்தில் போராளிகள் நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெறும் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்(16)

## இத்தியவெளியுறவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாங்க ஐ. கே. குஜ்ரால் வரவுள்ளார்.

1937 ஆம் ஆண்டு முதலாவது இந்திய, இலங்கைப் பொருளாதாரக் கூட்டுக் கமிஷன்அமைக்கப்பட்டுஅதன் முதல் நடவடிக்கையாக இந்தியா, இலங்கைக்கு 50கோடி ரூபா உதவி அளிப்பதாகத் தெரிவித்தது. அதில் 25 கோடி உடனடியாக, நேரடியாக இலங்கைக்கு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 12 கோடி ரூபா அளவில் சீமேந்து, டயர்கள், லொறி செசிகள் என்பன வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறிய பின்னரும், இந்தியாவில் புதிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் முதலாவது உயர்மட்ட அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருவதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்திய அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் இலங்கை விஜயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இலங்கை நவம்பரில் சார்க் மாநாட்டை நடத்த வற்புறுத்தக்கூடும் எனவும் தெரியவருகின்றது.